# நிகழ்நிலை வன்முறைகள்: நிதர்சன விளைவுகள்

## இலங்கையில் தொழில்நுட்பம் சார்ந்த பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறைகள் தொடர்பான சேவை வழங்களில் உள்ள இடைவெளிகள்

அனுராதபுரம், மட்டக்களப்பு, காலி, கிளிநொச்சி மற்றும் புத்தளம் ஆகிய மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்ட கள ஆய்வு



Funded by

UNITED NATIONS TRUST FUND TO END VIOLENCE AGAINST WOMEN

Centre for Equality and Justice

**© சமத்துவம் மற்றும் நீதிக்கான நிலையம் (CEJ) இலங்கை.**
அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டவை.

வடிவமைப்பு: தனுஸ்ரீ வெளிகள

அச்சு மற்றும் வெளியீடு: ஜூன் 2026

இந்தப் பதிப்பின் எந்தவொரு பகுதியையும் மீள உருவாக்கவோ, மீளெடுப்பு அமைப்பில் சேமித்து வைக்கவோ அல்லது எந்தவொரு வடிவத்திலோ அல்லது இலத்திரனியல், இயந்திர, புகைப்பட பிரதி, பதிவு செய்யவோ அல்லது முழுமையான நன்றிகூறலின்றி பயன்படுத்தப்படக் கூடாது.

மேலதிக தகவல்களுக்கு தொடர்பு கொள்ளுங்கள்:
சமத்துவம் மற்றும் நீதிக்கான நிலையம்
முகவரி: 37/2 எலிபேங்க் வீதி, கொழும்பு 05, இலங்கை.
தொலைபேசி: +94 11 2055404
மின்னஞ்சல்: srilanka.cej@gmail.com

ISBN 978-624-5847-32-7

# நிகழ்நிலை வன்முறைகள், நிதர்சன விளைவுகள்:

## இலங்கையில் தொழில்நுட்பம் சார்ந்த பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறைகள் தொடர்பான சேவை வழங்களில் உள்ள இடைவெளிகள்

அனுராதபுரம், மட்டக்களப்பு, காலி, கிளிநொச்சி மற்றும் புத்தளம் ஆகிய மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்ட கள ஆய்வு

# முன்னுரை

தொழில்நுட்பமானது, மக்கள் தொடர்பு கொள்ளும் விதம், தங்களை ஒருங்கிணைத்துக் கொள்ளும் விதம், தகவல்களை அணுகும் முறை மற்றும் பொது வாழ்வில் அவர்கள் பங்கேற்கும் வழி முறைகளை மாற்றியமைத்துள்ளது. இருப்பினும், இந்த வாய்ப்புகளுடன், டிஜிட்டல் தளங்களானது, குறிப்பாகப் பெண்கள், பெண்பிள்ளைகள் மற்றும் பால்நிலை சிறுபான்மையினருக்கு, வன்முறை, துன்புறுத்தல், பாகுபாடு மற்றும் துஷ்பிரயோகம் ஆகியவற்றின் களங்களாகவும் மாறியுள்ளன. சமீபத்திய ஆண்டுகளில், தொழில்நுட்பம் சார்ந்த தூண்டப்படும் பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறை (TFSGBV), நமது காலகட்டத்தில் மிகவும் அவசரமான மற்றும் வேகமாக வளர்ந்து வரும் மனித உரிமை தொடர்பாக கவனம் செலுத்தப்பட வேண்டிய கரிசனைகளில் ஒன்றாக உருவெடுத்துள்ளது. இது பெண்கள், பெண்பிள்ளைகள் மற்றும் பின்தங்கிய சமூகங்களைச் சேர்ந்தவர்களின் பாதுகாப்பு, கண்ணியம், உளநலம், கருத்துச் சுதந்திரம் மற்றும் பொது வாழ்வில் பங்கேற்பு ஆகியவற்றில் குறிப்பிடத்தக்க விளைவுகளை ஏற்படுத்துகிறன்றன.

இலங்கையில், டிஜிட்டல் தொழில்நுட்பங்களின் விரைவான வளர்ச்சியும் சமூக ஊடகத் தளங்களின் பயன்பாடும் அதிகரித்த அதேவேளையில் இணையவழித் துன்புறுத்தல், அனுமதியின்றிப் புகைப்படங்களைப் பகிர்தல், ஆள்மாறாட்டம், இணையவழிப் பின்தொடர்தல், வெறுப்புப் பேச்சு மற்றும் தொழில்நுட்பம் சார்ந்த தூண்டப்படும் பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறையின் (TFSGBV) பிற வடிவங்கள் போன்ற சம்பவங்கள் ஒருசேர அதிகரித்துள்ளன. இலக்குக் குழுக்களாக, அரசியல், சமூகச் செயல்பாடு, ஊடகவியல் மற்றும் பொது வாழ்க்கையில் ஈடுபாடுள்ள பெண்கள், அத்துடன் இளம் பெண்கள், பெண் சமபாலுறவினர், ஆண் சமபாலுறவினர், இருபாலுறவினர், மாற்றுப்பாலினத்தவர், பால்புதுமையர், இருபால்நிலை உடையவர்கள் மற்றும் பாலியல் ஈர்ப்பற்ற சமூகத்தினர் (LGBTQIA) மற்றும் பின்தங்கிய சமூகங்களைச் சேர்ந்த பெண்கள் ஆகியோர் விகிதாசாரத்திற்கப்பால்/அளவிற்கு மீறிய வகையில் குறிவைக்கப்படுகின்றனர். ஆள்மாறாட்ட தொழில்நுட்பம் (டீப்/பேக்/Deepfake) செயற்கை நுண்ணறிவு (AI) தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி, ஒருவரின் முகம் அல்லது குரலை மற்றொருவருடன் பொருத்தி, அச்சு அசல் பார்ப்பது போல் இருக்கும் போலியான வீடியோ அல்லது ஆடியோவை உருவாக்குவது) உருவாக்குவதை எளிதாக்கும் செயற்கை நுண்ணறிவு கருவிகள் உள்ளிட்ட வளர்ந்து வரும் தொழில்நுட்பங்கள், இந்தத் தீங்குகளை மேலும் தீவிரப்படுத்துவதோடு, பாதுகாப்பு, பொறுப்புக்கூறல் மற்றும் தீர்வு செயல் (பிரயாச்சித்தம்) ஆகியவற்றிற்குப் புதிய சவால்களையும் உருவாக்குகின்றன.
பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறைகள் (TFSGBV) அதிகரித்து வந்தபோதிலும், இலங்கையில் அதற்கான எதிர் நடவடிக்கைகள் சிதறலாகவும், போதிய வளங்கள் இல்லாமலும் காணப்படுகின்றன. பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர்கள், உதவிகளை நாடும்போது, கிடைக்கக்கூடிய சேவைகள் குறித்த குறைந்த விழிப்புணர்வு, மொழித் தடைகள், களங்கம், உளவியல் அதிர்ச்சியைக் (மோசமான அனுபவங்கள் ஏற்படுத்தக்கூடிய நீண்டகால மன வலி மற்றும் வேதனை) கையாளும் அணுகுமுறைகள் இல்லாமை, சேவை வழங்குநர்களிடையே போதிய டிஜிட்டல் கல்வியறிவு இல்லாமை மற்றும் நிறுவன ஒருங்கிணைப்பில் உள்ள இடைவெளிகள் உள்ளிட்ட பல தடைகளை அடிக்கடி எதிர்கொள்கின்றனர். பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறைக்கு (TFSGBV) எதிர்வினையாற்றும் பொறுப்புள்ள நிறுவனங்களின் மனிதவளத் திறன்களை ஆராயும் ஆய்வுகளும் குறைவாகவே உள்ளன.

சமத்துவம் மற்றும் நீதிக்கான நிலையம் (CEJ) மேற்கொண்டுள்ள இந்த ஆய்வானது, இலங்கையின் அனுராதபுரம், மட்டக்களப்பு, கிளிநொச்சி, காலி மற்றும் புத்தளம் ஆகிய ஐந்து மாவட்டங்களில், பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறையால் (TFSGBV) பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர்களுக்குக் கிடைக்கும் சேவைகளின் இருப்பு, அணுகல், ஏற்புத்தன்மை மற்றும் தரம் ஆகியவற்றை ஆராய்வதன் மூலம் அந்த இடைவெளியை நிவர்த்தி செய்ய முயல்கிறது. பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர்களை மையமாகக் கொண்ட மற்றும் உரிமைகளை அடிப்படையாகக் கொண்ட அணுகுமுறைகளின் அடிப்படையில், இந்த ஆய்வு அரசு மற்றும் அரசு சாரா சேவை வழங்குநர்களிடையே உள்ள நிறுவனத் திறன்கள், பணியாளர் பற்றாக்குறை, மொழி மற்றும் பால்நிலை உணர்திறன், பரிந்துரை வழிமுறைகள் மற்றும் பயிற்சித் தேவைகள் ஆகியவற்றை ஆராய்கிறது.
முக்கியமாக, இந்த அறிக்கையானது, தொழில்நுட்பம் சார்ந்த பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறைகளால் (TFSGBV) பாதிக்கப்பட்ட பெண்களின் அனுபவங்களையும் கண்ணோட்டங்களையும் மையப்படுத்துகின்றது. அவர்களின் குரல்கள், இணையவழி வன்முறையால் ஏற்படும் கடுமையான பாதிப்புகளுக்கு மட்டுமல்லாமல், தங்கள் தேவைகளுக்கு ஏற்ப பதிலளிக்க/எதிர்வினையாற்றுவதற்கு தயாராக இல்லாத நிறுவனங்களைக் கையாள்வதற்கான

மீள்திறன், தைரியம் மற்றும் உறுதியையும் வெளிப்படுத்துகின்றன. பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர்களின் உரிமைகளையும் கண்ணியத்தையும் நிலைநிறுத்துவதற்காக ஒருங்கிணைந்த, உளவியல் அதிர்ச்சி குறித்து புரிதலுடைய, மற்றும் தொழில்நுட்பத்திற்கு ஏற்ப பதிலளிக்கும்/எதிர்வினையாற்றும் சேவைகளின் அவசரத் தேவையினை இந்த ஆய்வு முடிவுகள் எடுத்துக்காட்டுகின்றன.

இலங்கையில் தொழில்நுட்பம் சார்ந்த பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறைகளுக்கு (TFSGBV) எதிரான நடவடிக்கைகளை வலுப்படுத்துவது குறித்து, கொள்கை வகுப்பாளர்கள், அரச நிறுவனங்கள், சிவில் சமூக அமைப்புகள், டிஜிட்டல் உரிமை ஆர்வலர்கள், ஆய்வாளர்கள் மற்றும் சர்வதேசப் பங்காளர்களிடையே நடைபெற்று வரும் கலந்துரையாடல்களுக்குப் பங்களிக்கும் நோக்கில் இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. இந்த ஆய்வில் முன்வைக்கப்பட்டுள்ள சான்றுகளும் பரிந்துரைகளும், அனைத்தையும் உள்ளடக்கிய கொள்கைகள், சிறந்த வளங்களைக் கொண்ட சேவைகள், வலுவான நிறுவனப் பொறுப்புக்கூறல் மற்றும் அனைவருக்கும் பாதுகாப்பான டிஜிட்டல் சூழல்கள் ஆகியவற்றை உருவாக்குவதற்கு உதவியாக அமையும் என நாங்கள் நம்புகிறோம்.

# நன்றியுரை

இலங்கையில் தொழில்நுட்பம் சார்ந்த பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறைகள் (TFSGBV) தொடர்பான சேவை வழங்குதலில் உள்ள மனிதவள இடைவெளிகள் குறித்த இந்த ஆய்வுக்குப் பங்களித்த அனைவருக்கும் சமத்துவம் மற்றும் நீதிக்கான நிலையம் (CEJ) தனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது. தங்கள் அனுபவங்கள், கண்ணோட்டங்கள் மற்றும் நிபுணத்துவத்தை மனமுவந்து பகிர்ந்துகொண்ட பெண்கள் மற்றும் பங்காளர்களின் துணிச்சல், நம்பிக்கை மற்றும் அர்ப்பணிப்பு இன்றி இந்த ஆய்வு சாத்தியப்பட்டிருக்காது.

இந்த ஆய்வின் இலக்கு மாவட்டங்கள் முழுவதும் நடத்தப்பட்ட முக்கியத் தகவலறிந்த நேர்காணல்கள் மற்றும் கணக்காய்வுகளில் பங்கேற்ற, குறிப்பாக தொழில்நுட்பம் சார்ந்த பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறையால் பாதிப்பிலிருந்து தப்பிப்பிழைத்த பெண்களுக்கு நாங்கள் நன்றி தெரிவித்துக் கொள்கிறோம். நிறைய பங்கேற்பாளர்கள் இணையவழித் துன்புறுத்தல், முறையற்ற நடவடிக்கைகள், அச்சுறுத்தல் மற்றும் வன்முறை தொடர்பான தங்களின் மிகவும் தனிப்பட்ட மற்றும் கடினமான அனுபவங்களைப் பகிர்ந்துகொண்டனர். அவர்கள் மத்தியில், களங்கம், பயம் மற்றும் உளவியல் அதிர்ச்சி (மோசமான அனுபவங்கள் ஏற்படுத்தக்கூடிய நீண்டகால மன வலி மற்றும் வேதனை) போன்றவை இருந்தபோதிலும் பேசுவதற்கான அவர்களின் விருப்பம் அளவற்ற வலிமையைப் பிரதிபலிப்பதோடு, இந்த ஆய்வையும் அதன் பரிந்துரைகளையும் வடிவமைப்பதில் மையமாகவும் இருந்துள்ளது. இலங்கையில், தொழில்நுட்பம் சார்ந்த பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறைகள் (TFSGBV) தொடர்பான பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர்களை மையமாகக் கொண்ட எதிர்வினைகளை மேம்படுத்துவதற்கும், அவர்களுக்கான பொறுப்புக்கூறல் மற்றும் ஆதரவு அமைப்புகளை வலுப்படுத்துவதற்கும் இந்த ஆய்வு அர்த்தமுள்ள பங்களிப்பை வழங்கும் என்று நாங்கள் நம்புகிறோம்.

நேர்காணல்கள் மற்றும் குழக் கலந்துரையாடல்களில் பங்கேற்ற மாகாண ரீதியிலான சேவை வழங்குநர்கள், ஆலோசகர்கள், மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பொலிஸ் உத்தியோகத்தர்கள், சட்ட வல்லுநர்கள், சிவில் சமூகப் பிரதிநிதிகள் மற்றும் பிற சமூகப் பங்காளர்களுக்கும் எங்களது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

நிறுவன ரீதியான சவால்கள், மனிதவள இடைவெளிகள், பரிந்துரை வழிமுறைகள் மற்றும் சேவை வழங்கல் ஆகியவை குறித்த அவர்களின் நுண்ணறிவுகள், தொழில்நுட்பம் சார்ந்த பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறைக்கு (TFSGBV) எதிரான தற்போதைய பதிலிறுப்புகள் பரந்துபட்ட பரப்பினைப் புரிந்துகொள்வதில் விலைமதிப்பற்றவையாக இருந்தன.

ஆய்வுச் செயல்முறை முழுவதும் நேர்காணல்களை நடத்திய, குழக் கலந்துரையாடல்களை வழிநடத்திய, கணக்காய்வுகளை நிர்வகித்த மற்றும் ஒருங்கிணைப்புக்கு ஆதரவளித்த எங்கள் பங்காளர் அமைப்புகளான முஸ்லிம் பெண்கள் அபிவிருத்தி நம்பிக்கையகம் (புத்தளம்), ராஜரட்ட பிரஜா கேந்திரய (அனுராதபுரம்), ஆய்வுக்கும் மேம்பாட்டுக்குமான இஸ்லாமிய மகளிர் ஒன்றியம் (மட்டக்களப்பு), கிராமிய மகளிர் முன்னணி (காலி) மற்றும் கிராம முகாமைத்துவத்திற்கான நிறுவனங்களின் சம்மேளனம் (கிளிநொச்சி) ஆகியவற்றின் அர்ப்பணிப்பையும் கடின உழைப்பையும் சமத்துவம் மற்றும் நீதிக்கான நிலையம் மனப்பூர்வமாக நன்றி பாராட்டுகின்றது. அவர்களின் சூழல் சார்ந்த அறிவு, நெறிமுறை சார்ந்த ஈடுபாட்டிற்கான அர்ப்பணிப்பு மற்றும் பங்கேற்பாளர்கள் மீதான உணர்திறன் ஆகியவை ஆய்வின் தரத்தையும் நம்பகத்தன்மையினையும் பெரிதும் வலுப்படுத்தியுள்ளன.

இந்த அறிக்கையின் வடிவமைப்பு, பகுப்பாய்வு, மொழிபெயர்ப்பு, ஒருங்கிணைப்பு மற்றும் மீளாய்வு செயல்முறைகளுக்கு ஆதரவளித்த அனைத்து நபர்களின் பங்களிப்புகளையும் சமத்துவம் மற்றும் நீதிக்கான நிலையம மேலும் நன்றி பாராட்டுகின்றது. இலங்கையில் இணையவழி வன்முறைகள் தொடர்பாக கவனம் செலுத்தியமைக்கும், பெண்கள், பெண் பிள்ளைகள் மற்றும் பால்நிலை சிறுபான்மையினருக்கான பாதுகாப்புகளை வலுப்படுத்துவதற்கும் பணியாற்றி வரும் பெண்ணிய ஆர்வலர்கள், டிஜிட்டல் உரிமை ஆர்வலர்கள், ஆய்வாளர்கள் மற்றும் நிறுவனங்களின் தொடர்ச்சியான முயற்சிகளையும் நாங்கள் பாராட்டுகிறோம்.

# உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| 1 | அறிமுகம் | 10 |
| 2 | முறையியல் | 13 |
| 3 | சேவை வழங்குநர்கள் தொடர்பான கண்ணோட்டம் | 16 |
| 4 | ஆய்வு பெறுபேறுகள் | 20 |
| 5 | பரிந்துரைகள் | 37 |
| 6 | உசாத்துணைப் பட்டியல் | 42 |

# அட்டவணைப் பட்டியல்



| | |
|---|---|
| **அட்டவணை 2.1** | ஆய்வில் பங்கேற்றவர்களின் வயது புள்ளிவிவரங்கள் |
| **அட்டவணை 2.2** | ஆய்வில் பங்கேற்றவர்களின் கல்வி நிலை |
| **அட்டவணை 4.1.1** | அனுபவிக்கப்பட்ட தொழில்நுட்பம் சார்ந்த பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறைகளின் (TFSGBV) வகைகள் |
| **அட்டவணை 4.1.2** | தொழில்நுட்பம் சார்ந்த பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறைகள் (TFSGBV) நிகழும் கால இடைவெளி (அடிக்கடி நிகழும் தன்மை) |
| **அட்டவணை 4.1.3** | தொழில்நுட்பம் சார்ந்த பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறைகள் (TFSGBV) நிகழும் தளங்கள் |
| **அட்டவணை 4.1.4** | தொழில்நுட்பம் சார்ந்த பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறைகளில் (TFSGBV) ஈடுபடும் குற்றவாளிகள்/வன்முறையாளர்கள் |
| **அட்டவணை 4.1.5** | தொழில்நுட்பம் சார்ந்த பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறைகள் (TFSGBV) அனுபவித்தமையின் காரணமாக ஏற்பட்ட விளைவுகள் |
| **அட்டவணை 4.2.1** | ஆதரவு மற்றும் இழப்பீட்டிற்க்கான நிவாரணம் கோரப்படும் வழிமுறைகள் |
| **அட்டவணை 4.2.2** | வழங்கப்பட்ட சேவைக் குறித்த திருப்தி |
| **அட்டவணை 4.2.3** | பணியாளர்களின் இருப்பு |
| **அட்டவணை 4.2.4** | உதவி நாடும்போது எதிர்கொள்ளும் சிரமங்கள் |
| **அட்டவணை 4.2.5** | சேவை வழங்குநர்களிடம் அவதானிக்கப்பட்டு சிறப்பியல்புகள் |
| **அட்டவணை 4.2.6** | அவதானிக்கப்பட்டப் பணியாளர் பயிற்சிகளின் அளவு |
| **அட்டவணை 5.1** | தொழில்நுட்பம் சார்ந்த பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறை (TFSGBV) பிரச்சினைகளைக் கையாளும் அல்லது பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவும் பணியாளர்களுக்கு தேவைப்படும் பயிற்சி |

# 1. அறிமுகம்

தொழில்நுட்பம் சார்ந்த பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறைகள் (TFSGBV) என்பது ஒரு பரவலான மனித உரிமை மீறலாகும், அது பெண்கள் மற்றும் பெண் பிள்ளைகளை இணையவழி ஊடாக மற்றும் இணையவழி இன்றிய பொது வெளி மற்றும் தனிப்பட்ட வெளிகளிலும், பாதிப்பை ஏற்படுத்தக் கூடியதாகும்.[1] தொழில்நுட்பம் சார்ந்த பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறைக்கு (TFSGBV) உலகளாவிய ரீதியில் பொதுமைப்படுத்தப்பட்ட வரையறை என்று எதுவும் இல்லை என்றாலும், அது ‘தகவல் தொடர்புத் தொழில்நுட்பங்கள் அல்லது பிற டிஜிட்டல் கருவிகளின் பயன்பாட்டினால் செயல்படுத்தப்பட்ட, உதவியாக்கப்பட்ட, தீவிரப்படுத்தப்பட்ட அல்லது மிகைப்படுத்தப்பட்ட எந்தவொரு செயலையும் உள்ளடக்கியிருக்கலாம்’. அச்செயலானது, உடல் ரீதியான, பாலியல் ரீதியான, உளவியல் ரீதியான, சமூக, அரசியல் அல்லது பொருளாதார ரீதியான பாதிப்பையோ அல்லது உரிமைகள் மற்றும் சுதந்திரங்கள் தொடர்பான பிற மீறல்களையோ விளைவிக்கலாம் அல்லது விளைவிக்க வாய்ப்புள்ளது.[2] குறிப்பிட்ட சில மக்கள் குழுக்கள், தொழில்நுட்பம் சார்ந்த பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறைக்கு (TFSGBV) உள்ளாகும் அதிக அபாயத்தில் உள்ளனர். பெண் பிள்ளைகள், இளம் பெண்கள், மற்றும் பன்மைத்துவமான பாலியல் நோக்குநிலை, பால்நிலை அடையாளம், பால்நிலை வெளிப்பாடு மற்றும் பால்நிலைப் பண்புகளைக் கொண்ட நபர்கள் (SOGIESC) ஆகியோர் தொழில்நுட்பம் சார்ந்த பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறைகள் (TFSGBV) அனுபவிப்பதற்கு அதிக வாய்ப்புள்ளது. குறிப்பாக, அரசியல் ரீதியாகச் செயல்படும் பெண்கள், மாற்றுத்திறனாளிப் பெண்கள், குறைந்த சமூக-பொருளாதாரப் பின்னணியைச் சேர்ந்த பெண்கள், அல்லது மத மற்றும் இனச் சிறுபான்மையினத்தைச் சேர்ந்த பெண்கள் ஆகியோர் விகிதாசாரமற்ற முறையில் பாதிக்கப்படுகின்றனர்.[3] செயற்கை நுண்ணறிவு புகைப்பட உருவாக்கிகள் போன்ற புதிய தொழில்நுட்பங்களால் இவ்வாறான வன்முறைகள் தற்போது பெரும்பாலும் மிகைப்படுத்தப்பகிறது. இவை ஆள்மாறாட்டத் தொழில்நுட்பம் (டீப்/பேக்/Deepfake) செயற்கை நுண்ணறிவு (AI) தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி, ஒருவரின் முகம் அல்லது குரலை மற்றொருவருடன் பொருத்தி, அச்சு அசல் பார்ப்பது போல் இருக்கும் போலியான வீடியோ அல்லது ஆடியோவை உருவாக்குவது) போன்ற தீங்கு விளைவிக்கும் உள்ளடக்கம் அதிகரிப்பதற்கு பங்களிக்கின்றன. அத்தகைய விடயங்கள் சமூக வலைத்தளங்கள் வழியாகப் பகிரப்பட்டு பெண்களின் மீதான வெறுப்பைத் தூண்டும் இணையவழி குழுக்கள் உருவாக வழிவகுக்கின்றன.

தொழில்நுட்பம் சார்ந்த பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறைகளானது (TFSGBV) கருத்துச் சுதந்திரம், தனியுரிமை மற்றும் பாகுபாடின்மை உள்ளிட்ட பல மனித உரிமைகளை மீறுகின்றது.[4] பெண்களுக்கு எதிரான அனைத்து வகையான பாகுபாடுகளையும் ஒழிப்பதற்கான சர்வதேசக் குழு (CEDAW), வெளிப்படையாக தனது பொதுப் பரிந்துரை 35-இன் மூலம், தொழில்நுட்பம் சார்ந்த பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறையை (TFSGBV) பால்நிலை அடிப்படையிலான வன்முறையின் ஒரு புதிய வடிவமாக அதிகாரப்பூர்வமாக அங்கீகரிக்கின்றது.

[1] ஐக்கிய நாடுகள் மக்கள் தொகை நிதியம் (UNFPA) மற்றும் ஐக்கிய நாடுகள் பெண்கள் அமைப்பு (UN Women) UNFPA and UN Women, Research Study on Technology-Facilitated Violence experienced by Women and Marginalized Groups in Sri Lanka (August 2025), page 9

[2] ஐக்கிய நாடுகள் பெண்கள் அமைப்பு (UN Women) , ‘UNGA79: Intensification of efforts to eliminate all forms of violence against women: technology-facilitated violence against women and girls report of the UN Secretary-General’ (2024)

[3] சீடோ கமிட்டி ‘Working Group on Gender Based Violence, Technology facilitated gender based violence against women: Initial position paper’, ஐக்கிய நாடுகள் மக்கள் தொகை நிதியம் (UNFPA) மற்றும் ஐக்கிய நாடுகள் பெண்கள் அமைப்பு (UN Women) ‘Research Study on Technology-Facilitated Violence experienced by Women and Marginalized Groups in Sri Lanka’ (2025)

[4] நிகழ்நிலையில் பெண்களைப் பாதுகாப்பதற்கான நிலையம் (Centre for Protecting Women Online);, Response to Human Rights Council’s Advisory Committee Questionnaire on Technology-Facilitated Gender-Based Violence against Women and Girls (2025)

## 1.1 இலங்கையில் தொழில்நுட்பம் சார்ந்த பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறைகள் (TFSGBV)

இலங்கையில், ஒருவரின் அனுமதியின்றி அந்தரங்கப் புகைப் படங்கள் அல்லது காணொளிகளைப் பகிர்தல், அனுமதியின்றி தனிப்பட்ட தகவல்களை வெளியிடுதல், டாக்ஸிங் (ஒருவரின் தனிப்பட்ட தகவல்களை (பெயர், முகவரி, தொலைபேசி எண் போன்றவை) அவரது அனுமதியின்றி இணையத்தில் வெளியிடுவது- ஒரு வகையான இணையவழி துன்புறுத்தல்), மற்றும் பெரும்பாலும் துன்புறுத்துதல், அச்சுறுத்துதல் அல்லது மிரட்டும் நோக்கத்துடன் ஒரு தனிநபரின் அடையாளத்தைத் திருடிப் போலி இணைய சுயவிபரங்களை உருவாக்கும் தீங்கு விளைவிக்கும் நடவடிக்கைகள் போன்ற செயல்களைப் பொதுவாக தொழில்நுட்பம் சார்ந்த பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறைகள் (TFSGBV) உள்ளடக்கியுள்ளது. கோவிட்-19 பெருந்தொற்று, பொருளாதார நெருக்கடி, காலி முகத்திடல் போராட்டம் மற்றும் ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்கள் போன்ற தேசிய நெருக்கடிக் காலங்களில், குறிப்பாக மத மற்றும் இன அடிப்படையிலான சிறுபான்மையினருக்கு எதிராக, இணையவழி வெறுப்புப் பேச்சுக்களும் தொழில்நுட்பம் சார்ந்த பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறைகளும் அதிகரித்துள்ளன.[5] தொழில்நுட்பம் சார்ந்த பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறையில் (TFSGBV) ஏறக்குறைய 53.5 வீதமானவை குறிப்பாக பெண் அரசியல்வாதிகள் மற்றும் ஆர்வலர்கள் போன்ற பெண்களை இலக்காகக் கொண்டிருந்தது என்றும் ஆய்வுகள் சுட்டிக்காட்டுகின்றன.[6] இலங்கையில் பெண் சமபாலுறவினர், ஆண் சமபாலுறவினர், இருபாலுறவினர், மாற்றுப்பாலினத்தவர், பால்புதுமையர், இருபால்நிலை உடையவர்கள் மற்றும் பாலியல் ஈர்ப்பற்ற சமூகத்தினரும் (LGBTQIA) தொழில்நுட்பம் சார்ந்த பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறைகளுக்கு (TFSGBV) அதிகளவில் இலக்காகி வருகின்றனர்.[7]

தொழில்நுட்பம் சார்ந்த பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறைகள் கடுமையான மற்றும் நீண்டகால உடல், உளவியல், அரசியல், சமூக மற்றும் பொருளாதார விளைவுகளை ஏற்படுத்தக்கூடும்.[8] தொழில்நுட்பம் சார்ந்த பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறைகளை அனுபவித்து, பாதிப்பிலிருந்து தப்பிப்பிழைத்தவர்களை இணையப் பொதுவெளிகளில் பங்கேற்பதிலிருந்து ஊக்கமிழக்கச் செய்கிறது.[9] பாதிப்பிலிருந்து தப்பிப் பிழைத்தவர்களில் சிலர், தங்களையே குற்றம் சாட்டும் நிலைக்கு ஆளாவதோடு, தங்கள் தோற்றத்தை மாற்றிக்கொள்ளவும், வேறு இடத்திற்குச் செல்லவும், சமூக ஊடகக் கணக்குகளை நீக்கவும், தங்களது சிம் கார்டுகளை (சந்தாதாரர் அடையாள அட்டை) அப்புறப்படுத்தவும், சில சமயங்களில் தற்கொலைக்கு முயற்சி செய்யவும் கட்டாயப்படுத்தப்பட்டதாக அல்லது நிர்ப்பந்திக்கப்பட்டதாக உணர்கிறார்கள்.[10]

சமத்துவம் மற்றும் நீதிக்கான நிலையம் (CEJ) நடாத்திய இந்த கள ஆய்வானது, தொழில்நுட்பம் சார்ந்த பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறையால் (TFSGBV) பாதிப்பிலிருந்து மீண்டவர்களுக்கு சேவைகளை வழங்கும் நிறுவனங்களில் உள்ள மனிதவள இடைவெளிகளில் கவனம் செலுத்துகிறது. தொழில்நுட்பத்தால் தூண்டப்படும் வன்முறையை எதிர்த்துப் போராடுவதற்கான தலையீடுகள், ‘முறையான ஆய்வின் 5 தூண்கள்’ மூலம் வழிநடத்தப்படலாம் என்று பால்நிலை அடிப்படையிலான வன்முறை மீதான ஐக்கிய நாடுகளின் பெண்களுக்கு எதிரான அனைத்து வகையான பாகுபாடுகளையும் இல்லாது ஒழிப்பதற்கான பணிக்குழு (CEDAW) குறிப்பிடுகின்றது.[11] இவற்றில், தொழில்நுட்பம் சார்ந்த வன்முறையைத் தடுத்தல் பெண்கள் மற்றும் பெண் பிள்ளைகளைத் தொழில்நுட்பம் சார்ந்த வன்முறையிலிருந்து பாதுகாத்தல் தொழில்நுட்பம் சார்ந்த வன்முறைச் செயல்களை விசாரணை செய்தல்

---

[5] ஐக்கிய நாடுகள் மக்கள் தொகை நிதியம் (UNFPA) மற்றும் ஐக்கிய நாடுகள் பெண்கள் அமைப்பு (UN Women) ‘Research Study on Technology-Facilitated Violence experienced by Women and Marginalized Groups in Sri Lanka’ (2025)

[6] மே. கு. அதே நூற்பகுதியில் 13.

[7] மே. கு. அதே நூற்பகுதியில் 3.

[8] சீடோ கமிடி ‘Working Group on Gender Based Violence, Technology facilitated gender based violence against women: Initial position paper’ ஐக்கிய நாடுகள் மக்கள் தொகை நிதியம் (UNFPA) மற்றும் ஐக்கிய நாடுகள் பெண்கள் அமைப்பு (UN Women) ‘Research Study on Technology-Facilitated Violence experienced by Women and Marginalized Groups in Sri Lanka’ (2025)

[9] ஐக்கிய நாடுகள் மக்கள் தொகை நிதியம் (ருசேயு) மற்றும் ஐக்கிய நாடுகள் பெண்கள் அமைப்பு (UN Women) ‘Research Study on Technology-Facilitated Violence experienced by Women and Marginalized Groups in Sri Lanka’ (2025)

[10] மே. கு. அதே நூற்பகுதியில் 37.

[11] The Due Diligence project has evolved from CEDAW (1979 and 1993) and seeks to advocate for the inclusion of the 5Ps in VAWG discourse globally.

மற்றும் வழக்குப் பதிவு செய்தல் இணையவழிக் குற்றவாளிகளைத் (சைபர் குற்றவாளிகள்) தண்டித்தல் பாதிப்பிலிருந்து மீண்ட பெண்கள் மற்றும் பெண் பிள்ளைகளுக்கு உரிய நீதி மற்றும் நிவாரணம் வழங்குதல்' ஆகியவை உள்ளடங்குகின்றன.[12] ஐ.நா. பெண்கள் அமைப்பு மற்றும் உலக சுகாதார அமைப்பால் உருவாக்கப்பட்ட வன்முறைத் தடுப்புக் கட்டமைப்பின் ஒரு அம்சமான 'மதிப்பு' (RESPECT), பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர்களை மையமாகக் கொண்ட, தொழில்நுட்ப ரீதியாக பதிலளிக்கக்கூடிய சேவைகளுக்கான அணுகலை உறுதி செய்வதன் முக்கியத்துவத்தை எடுத்துரைக்கிறது. இவற்றுள் (1) சட்ட அமுலாக்கம், உதவி எண்கள் மற்றும் ஆதரவு மையங்களுக்குள் ஊடாக தொழில்நுட்பம் சார்ந்த பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறை TFSGBV-க்கான பாதிக்கப்பிலிருந்து தப்பிப்பிழைத்தவர்களுக்குப் பாதுகாப்பாகவும், எளிமையாகவும் புகார் அளிப்பதையும், அவர்களுக்குத் தேவையான உதவிகள் உடனடியாக கிடைப்பதையும் உறுதி செய்தல், (2) இணையவழி துன்புறுத்தல் மற்றும் அனுமதியின்றி புகைப்படங்களைப் பகிர்தலின் தன்மையைப் புரிந்துகொள்ளும் பன்மொழி, இரகசிய உதவி எண்கள் மற்றும் ஆலோசனை சேவைகளை உருவாக்குதல், மற்றும் (3) தொழில்நுட்பம் சார்ந்த பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறையை TFSGBV அடையாளம் கண்டு அவற்றை கையாள்வது குறித்து சேவை வழங்குநர்களான சமூகப் பணியாளர்கள், சுகாதார வல்லுநர்கள், பொலிஸ் மற்றும் சட்ட அமுலாக்கத் துறையினருக்குப் பயிற்சி அளித்தல் ஆகியவை உள்ளடங்குகின்றன.[13]

இந்தப் பின்னணியில், இந்த ஆய்வானது, யுனிசெ/பின் (ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியம்) AAAQ (கிடைப்புத்தன்மை, அணுகல்தன்மை, ஏற்புத்தன்மை மற்றும் தரம்) கட்டமைப்பைப் பயன்படுத்தி, தொழில்நுட்பம் சார்ந்த பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறையை (TFSGBV) கையாள்வதற்குத் தேவையான சேவைகளுக்கான அணுகல் மற்றும் மனித வளங்களை மதிப்பிடுகிறது.[14] மொழி உணர்திறன் மிக்க பணியாளர்களின் இருப்பு, பணியாளர்களின் பால்நிலை, மற்றும் கிடைக்கக்கூடிய ஆலோசகர்கள், உளவியலாளர்கள், மனநல மருத்துவர்கள், பொலிஸ் அதிகாரிகள், மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் போன்றோரின் எண்ணிக்கையை மதிப்பிடுவது இதில் உள்ளடங்குகின்றது. வழங்கப்படும் சேவைகளின் தரத்தை மதிப்பிடும் பொருட்டு, இந்த ஆய்வானது, டிஜிட்டல் பாதுகாப்பு, உளவியல் அதிர்ச்சிகளுக்கு பாதுகாப்பான முறையில் அளிக்கப்படும் மனநலம் சார்ந்த ஆலோசனை மற்றும் தொழில்நுட்பம் சார்ந்த பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறை (TFSGBV) குறித்த அறிவு ஆகியவற்றின் அடிப்படையில் பணியாளர்கள் பயிற்சி பெறுவதற்கான அணுகலையும் ஆராய்கின்றது.

[12] சீடோ கமிடி 'Working Group on Gender Based Violence, Technology facilitated gender based violence against women: Initial position paper'

[13] ஐக்கிய நாடுகள் மக்கள் தொகை நிதியம் (UNFPA) மற்றும் ஐக்கிய நாடுகள் பெண்கள் அமைப்பு (UN Women) 'Research Study on Technology-Facilitated Violence experienced by Women and Marginalized Groups in Sri Lanka' (2025)

[14] ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியம் 'Availability, Accessibility, Acceptability and Quality Framework: A Tool to Identify Potential Barriers to Accessing Services in Humanitarian Settings'

# 2. முறையியல்

இந்தக் கள ஆய்வானது அனுராதபுரம், மட்டக்களப்பு, கிளிநொச்சி, காலி மற்றும் புத்தளம் ஆகிய மாவட்டங்களில் நடாத்தப்பட்டது. ஒவ்வொரு மாவட்டத்திலும் ஏழு முக்கியத் தகவல் அளிப்பவர்களுடனான நேர்காணல்கள் நடாத்தப்பட்டன, இவற்றுள் சேவை வழங்குநர்களுடன் நான்கு நேர்காணல்களும், தொழில்நுட்பம் சார்ந்த பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறையினால் (TFSGBV) பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்த பெண்களுடன் மூன்று நேர்காணல்களும் இடம்பெற்றன. இந்த ஆய்வில் பங்குப்பற்றிய, பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்த பெண்கள், தங்களின் அனுமதியின்றி புகைப்படங்களைப் பகிர்தல் மற்றும் திரிபுகள் அல்லது அவற்றை மாற்றி வடிவமைத்தல், சமூக ஊடகக் கணக்குகளை ஹேக் செய்தல் (உரிமையாளரின் அனுமதியின்றித் சமூக ஊடகக் கணக்குகளில் நுழைந்து தகவல்களைத் திருடுதல் அல்லது முடக்குதல்), அந்தரங்கத் தனிப்பட்ட தகவல்களை வெளியிடுவதாகக் கூறி அச்சுறுத்தல், மற்றும் அவர்களின் அரசியல் ஈடுபாடு காரணமாக இணையத்தில் குறிவைக்கப்பட்ட தாக்குதல்கள் செய்தல் உள்ளிட்ட பல்வேறு வகையான தொழில்நுட்பம் சார்ந்த பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறைகளை (TFSGBV) எதிர்கொண்டிருந்தனர். சம்பவங்களைப் புகாரளித்தவர்கள் பொதுவாக பொலிஸ், கிராம அலுவலர்கள், சிவில் சமூக அமைப்புகள், மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் (WDOs), ஆலோசகர்கள் மற்றும் இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு (TRC) ஆகியோரை அணுகியிருந்தனர். இந்த ஆய்வின் நோக்கத்திற்காக, பாதிக்கப்பட்ட பெண்களின் பெயர்கள் மறைக்கப்பட்டு புனைவுப் பெயர்களைக் கொண்டு அடையாளப்படுத்தப்பட்டுள்ளனர். மேலும், இப் படக்குறிப்பு ஆய்வுக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஐந்து மாவட்டங்கள் ஒவ்வொன்றிலும், அரச சேவை வழங்குநர்கள் மற்றும் சிவில் சமூகப் பங்காளர்களுடன் இரண்டு இலக்குக்குழு கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்டன.

மேலதிகமாக, தொழில்நுட்பம் சார்ந்த பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறையால் (TFSGBV) பாதிக்கப்பட்ட 175 பெண்களிடம் (இலக்கு மாவட்டங்கள் ஒவ்வொன்றிலும் 35 பெண்கள்) அனாமதேயமான/பெயர் அடையாளப்படுத்தப்படாத ஒரு ஆய்வு நடத்தப்பட்டது. அந்தக் ஆய்வு, தொழில்நுட்பம் சார்ந்த பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறை மற்றும் பல்வேறு ஆதரவு சேவைகள் குறித்த பெண்களின் அனுபவங்களை மதிப்பிடும் பல்தேர்வு தெரிவு மற்றும் ஆம்/இல்லை வினாக்களும், சேவை வழங்குதலை மேம்படுத்துவதற்கான பரிந்துரைகள் குறித்த ஒரு திறந்தநிலை வினாவும் உள்ளடங்கியிருந்தன.

**அட்டவணை 2.1:**
ஆய்வில் பங்கேற்றவர்களின் வயதுப் புள்ளிவிவரங்கள்:



**அட்டவணை 2.2:** ஆய்வில் பங்கேற்றவர்களின் கல்வி நிலை விபரங்கள்




அக்டோபர் 2025 முதல் ஏப்ரல் 2026 வரை, இலக்கு மாவட்டங்கள் ஒவ்வொன்றிலும் முக்கியத் தகவல் அளிப்பவர்களுடனான நேர்காணல்கள், இலக்குக்குழு கலந்துரையாடல்கள் மற்றும் ஆய்வுகள் போன்றவை சமத்துவம் மற்றும் நீதிக்கான நிலையத்தின் பங்காளர் நிறுவனங்களால் நடாத்தப்பட்டன. தரவு சேகரிப்பிற்கு முன்னதாக, சமத்துவம் மற்றும் நீதிக்கான நிலையமானது அனைத்து நேர்காணல் செய்பவர்கள் மற்றும் கணக்காய்வாளர்களுக்கு ஒரு பயிற்சி அமர்வை நடாத்தியது. அந்தப் பயிற்சியில், மூன்று மொழிகளிலும் கிடைக்கக்கூடிய சமத்துவம் மற்றும் நீதிக்கான நிலையத்தின் ஒப்புதல் படிவங்களைப் பயன்படுத்தி, பங்கேற்பாளர்களிடமிருந்து எவ்வாறு தகவலறிந்த ஒப்புதலை பெறுவது என்பது குறித்த விளக்கங்கள் இடம்பெற்றிருந்தன. அதன்படி, தரவு சேகரிப்பு செயல்முறையின் ஒரு பகுதியாக, நேர்காணல் நிறைவடைந்த திகதியிலிருந்து இரண்டு வாரங்களுக்குள் அவர்கள் அதிலிருந்து விலகிக்கொள்ளலாம் என்றும், இவற்றில் முழுமையான இரகசியத்தன்மையைப் பேணுவதற்காக, தொழில்நுட்பம் சார்ந்த பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறையால் பாதிப்பிலிருந்து தப்பிப்பிழைத்த பெண்களுடனான அனைத்து முக்கிய தகவலறிந்த நேர்காணல்களிலும் பெயர் அடையாளப்படுத்தப்படுவதில்லை என்றும் பங்கேற்பாளர்களுக்குத் தெரிவிக்கப்பட்டது. பங்கேற்பாளர்கள் மீண்டும் உளவியல் அதிர்ச்சிக்கு உள்ளாகாமல் இருப்பதை உறுதி செய்வதற்காக, நேர்காணல்களை நடத்தும் போது உளவியல் அதிர்ச்சி சார்ந்த உணர்திறன் கொண்ட அணுகுமுறையைக் கடைப்பிடிக்குமாறு நேர்காணல் செய்பவர்களுக்கும் கணக்காய்வாளர்களுக்கும் பயிற்சி அளிக்கப்பட்டது.
தொழில்நுட்பம் சார்ந்த பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறையால் பாதிப்பிலிருந்து தப்பிப்பிழைத்த பெண்களுடன் நடாத்தப்பட்ட முக்கிய தகவலறிந்த நேர்காணல்கள் பின்வரும் தலைப்புகளில் கவனம் செலுத்தின: (i) சம்பவங்களைப் புகாரளித்தல் (ii) பெண்களின் வெவ்வேறு அடையாளங்களின் அம்சங்கள் எவ்வாறு அவர்கள் சேவைகளை அணுகுவதை பாதிக்கின்றன் (iii) பணியாளர்களின் பணித்திறனில் (அல்லது ஆற்றலில்) உணரப்பட்ட இடைவெளிகள் (iv) விரும்பிய மொழியில் சேவைகளை அணுகும் திறன் மற்றும் (v) பிற சேவைகளுக்குப் பரிந்துரைத்தல்.
சேவை வழங்குநர்களுடனான முக்கியத் தகவலறிந்த கலந்துரையாடல்கள் பின்வரும் தலைப்புகளில் கவனம் செலுத்தின: (i) சேவைகளைப் பெறும்போது பெண்கள் எதிர்கொள்ளும் தடைகள் மற்றும் சவால்கள் (ii) உதவி எண்களைப் பெண்கள் அணுகுதல் (iii) பணியாளர்களின் பணித்திறனில் (அல்லது ஆற்றலில்) உணரப்பட்ட இடைவெளிகள் (iv) பணியாளர்களின் திறனில் உணரப்படும் இடைவெளிகள் (v) பணியாளர்களுக்கான கிடைக்கக்கூடிய பயிற்சி (vi) சேவை வழங்குதலில் காணப்படகூடிய பால்நிலை மற்றும் மொழிசார் உணர்திறன் (vii) பரிந்துரைப்பதற்கான வழிமுறைகள் மற்றும் (viii) சேவை வழங்குதலை மேம்படுத்துவதற்கான பரிந்துரைகள்.

பங்காளர்கள் மற்றும் சேவை வழங்குநர்களுடனான குழுக் கலந்துரையாடல்கள் பின்வரும் தலைப்புகளில் கவனம் செலுத்தின: (i) சேவைகள் வழங்குவதில் உள்ள இடைவெளிகள் மற்றும் சவால்கள் (ii) கிடைக்கக்கூடிய உதவித் தொலைபேசி எண்கள் (iii) சேவைகளைப் பெறும்போது பெண்கள் எதிர்கொள்ளும் சவால்கள் (iv) சேவைகள் பால்நிலை, மொழி, மாற்றுத்திறன்

மற்றும் வயது ஆகியவற்றிற்கு ஏற்றவாறு உள்ளதா என்பது (v) பரிந்துரைகளுக்கான வழிமுறைகள், (vi) தகுதிவாய்ந்த பணியாளர்களைப் பணியமர்த்துவதற்கும் மற்றும் அவர்களை நிறுவனத்தில் தொடர்ந்து தக்கவைத்துக் கொள்ளுதலிலும் உள்ள தடைகள், (vii) சேவை வழங்குதலை மேம்படுத்துவதற்கான பரிந்துரைகள் மற்றும் (viii) மனச்சோர்வைச் சமாளிக்கப் பணியாளர்களுக்கான ஆதரவு.

ஒட்டுமொத்தமாக, சேவை வழங்கும் நிறுவனங்களில் உள்ள மனிதவள இடைவெளிகளைப் புரிந்துகொள்வதன் மூலம், ஊழியர்களுக்கு எதிரான மற்றும் தொழில்நுட்பம் சார்ந்த பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறையை (TFSGBV) எதிர்கொள்வதை நோக்கமாகக் கொண்ட தலையீடுகளை வலுப்படுத்துவதற்கான உத்திகளை உருவாக்குவதே இந்த கள ஆய்வின் நோக்கமாகும்.

# 3. சேவை வழங்குநர்கள் தொடர்பான பார்வை

தொழில்நுட்ப ரீதியாக எளிதாக்கப்பட்ட பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறைச் சம்பவங்களைத் தொடர்ந்து, பாதிக்கப்பட்டு தப்பிப்பிழைத்தவர்களுக்கு அவர்களின் பல்வேறு தேவைகளை நிவர்த்தி செய்வதற்காக பல்வேறு வகையான சேவைகளை அணுகுவதற்கான சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும். இதுவரை மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் அடிப்படையில் , பெண்கள் இவ்வாறான சந்தர்ப்பங்களில் அணுகக்கூடிய ஐந்து வகையான சேவை வழங்குநர்கள் காணப்படுகின்றனர்: (1) சட்ட அமுலாக்க அமைப்புகள், (2) சட்ட உதவி நிலையங்கள், (3) உளநல ஆலோசனைச் சேவைகள், (4) அவசர உதவித் தொலைபேசி இலக்கங்கள், மற்றும் (5) சிவில் சமூக அமைப்புகள்.

## 1. சட்ட அமுலாக்கத் துறை

உள்ளூர் பொலிஸ் நிலையங்களில் இயங்குகின்ற சிறுவர் மற்றும் பெண்கள் உதவிப் பிரிவு, இலங்கைப் பொலிஸ் தலைமயக்கத்துடன் இணைக்கப்பட்ட சிறுவர் மற்றும் பெண்கள் உதவிப் பணியகம், மற்றும் குற்றவியல் விசாரணைத் திணைக்களத்தினது[15] கணினிக் குற்றங்கள் விசாரனை அலகு போன்றவற்றில் தொழில்நுட்ப ரீதியாக எளிதாக்கப்பட்ட பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறை தொடர்பிலான முறைப்பாடுகளை மேற்கொள்ளலாம். எனினும், தற்போதுள்ள ஆவணங்கள் சுட்டிக்காட்டுவது என்னவென்றால், எல்லா பொலிஸ் நிலையங்களிலும் குறித்த சிறுவர் மற்றும் பெண்கள் உதவிப் பிரிவு காணப்படுவதில்லை என்பதோடு அத்தகைய உதவிப் பிரிவுகள் காணப்படுகின்ற பொலிஸ் நிலையங்கள் போதிய போதுமான நிதி வசதிகளின்றி இயங்குகின்றன மற்றும் வரவுசெலவுத் திட்ட நிதி ஒதுக்கீட்டில் இத்தகைய போலீஸ் நிலையங்களுக்கான நிதி ஒதுக்கீட்டுக்கு குறைந்த முன்னுரிமையே வழங்கப்படுகின்றது.[16]

கணினிக் குற்றவியல் புலனாய்வுப் பிரிவு (CCID) பிரிவு, கொழும்பு, கண்டி, அம்பாறை, மாத்தறை மற்றும் குருணாகல்.[17] போன்ற நாட்டின் ஐந்து மாவட்டங்களில் மட்டுமே செயல்படுகிறது. கணினிக் குற்றவியல் புலனாய்வுப் பிரிவு (CCID) பிரிவு இயங்காத பிரதேசங்களில் மக்கள் நீண்ட தூரம் பயணிக்க வேண்டிய நிலைக்கு தள்ளப்படுகின்றனர், இத்தகைய நிலைமையானது மக்கள் குறித்த குற்றங்கள் தொடர்பாக முறைப்பாடுகளை[18] மேற்கொள்வதிலிருந்து விலக்களிப்பு செய்கின்றது. மேலும், தொழில்நுட்ப ரீதியாக எளிதாக்கப்பட்ட பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறை (TFSGBV)[19] தொடர்பான முறைப்பாடுகளைப் பால்நிலைக் கூருணர்வுடன் கையாள்வது மற்றும் இலத்திரனியல் தடயவியலில் தேவையான சிறப்புத் தொழில்நுட்ப நிபுணத்துவம் இல்லை என்பதையும் ஆய்வுகள் சுட்டிக்காட்டுகிறது.

## 2. சட்ட உதவி

நாடளாவிய ரீதியில்[20] 77 சட்ட உதவி நிலையங்கள் மூலம் இலவச சட்ட உதவிகள் வழங்கப்படுகின்றன. இத்தகைய நிலையங்கள் மூலம் பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர்கள் ஆலோசனைகளை கோரலாம், உதவி எண்ணை அழைக்கலாம் மற்றும் நடமாடும் சேவை முகாம்களில் பங்கேற்கலாம்.[21] சட்ட உதவி ஆணைக்குழு பொதுவாக தொழில்நுட்ப ரீதியாக எளிதாக்கப்பட்ட பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறை

[15] சமத்துவம் மற்றும் நீதிக்கான நிலையம் (CEJ) மற்றும் இக்வாலிட்டி நவ் (Equality Now) இணைந்து வழங்கிய, 'Shadow Report to the United Nations Committee on the Elimination of Discrimination Against Women', இலங்கையின் 9வது காலகட்ட மதிப்பாய்வு (2025)

[16] மே. கு. அதே நூற்பகுதியில்

[17] மே. கு. அதே நூற்பகுதியில்

[18] ஐக்கிய நாடுகள் மக்கள் தொகை நிதியம் (UNFPA) மற்றும் ஐக்கிய நாடுகள் பெண்கள் அமைப்பு (UN Women) Research Study on Technology-Facilitated Violence experienced by Women and Marginalized Groups in Sri Lanka (2025), 44

[19] மே. கு. அதே நூற்பகுதியில

[20] இலங்கை சட்ட உதவி ஆணைக்குழு, இலங்கை சட்ட உதவி ஆணைக்குழு

[21] சமத்துவம் மற்றும் நீதிக்கான நிலையம் (CEJ), 'Trapped: A rapid assessment of the prevalence and response to cases of cyber sexual and gender-based violence and gendered online hate speech' (2023)

(TFSGBV) பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர்களை குறித்த முறைப்பாடுகள் தொடர்பில் பொலிஸ ாரிடம் செல்லுமாறு வழிநடத்துகிறது, அதன் பின்னர் நீதிமன்றங்களுக்கும்.[22] அனுப்புகிறது. எனினும், குறைந்த தண்டனை விகிதங்கள் மற்றும் நீண்ட காலம் செல்லும் நீதிமன்ற நடைமுறைகள் காரணமாக பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர்கள் முறைப்பாடுகள் செய்வதை தவிர்க்கின்றனர், ஏனெனில் இவை பெரும்பாலும் நீடித்த மன உளைச்சலுக்கும் மீண்டும் பாதிக்கப்படுவோம் என்ற அச்சத்திற்கும்[23] வழிவகுக்கின்றன. குறிப்பாக, தொழில்நுட்ப ரீதியாக எளிதாக்கப்பட்ட பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறை (TFSGBV) தொடர்பிலான முறைப்பாடுகளைக் கையாள்வதற்கான தொழில்நுட்ப வளங்கள் மற்றும் மனித வளப் பற்றாக்குறையும் காணப்படுகிறது.

## 3. உளவள ஆலோசனை

பெண்கள் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சின் கீழ் பணிபுரியும் கிராமமட்டப் பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் (WDOs) குறித்த முறைப்பாடுகள் தொடர்பில் அடிப்படை ஆலோசனை ஆதரவை[24] வழங்குகின்றனர். தொலைபேசி மூலம் குறித்த முறைப்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றபோது, பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் (WDOs) பாதிக்கப்பட்ட பெண்களின் பாதுகாப்பை[25] உறுதிப்படுத்துவதற்காக நேரடியாக அவர்களை வீட்டில் சென்று சந்திக்கின்றனர். குறித்த பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், (WDOs) மருத்துவமனைகள், பொலிஸ், நீதிமன்றங்கள் மற்றும் தொடர்ச்சியான உளவியல் சிகிச்சைகளுக்கும் பரிந்துரைகளை மேற்கொள்கின்றனர். பாதிக்கப்பட்டவர் சிறுவராக காணப்படுகின்ற பட்சத்தில், சிறுவர் பாதுகாப்பு நன்னடத்தை உத்தியோகத்தரிடம் பரிந்துரைக்கின்றனர்.[26] பெண்கள அபிவிருத்தி உத்தியோகத்தர்களை (WDOs) நேரடியாக அவர்களது தொலைபேசி இலக்கம் மூலமாகவோ அல்லது வாரத்தில் ஏழு நாட்கள் இருபத்திநான்கு மணி நேரமும் இயங்கும் 1938 அவசர உதவித் தொலைபேசி இலக்கம் மூலமாகவோ தொடர்பு கொள்ளலாம்.

பிரதேச செயலகத்தில் இணைக்கப்பட்டுள்ள உளவள ஆலோசனை உதவியாளர்கள், அரச மருத்துவமனைகளில் உள்ள 'மித்துரு பியசா'/'நட்பு நிலையம்' பிரிவின் உளவள ஆலோசகர்கள் மற்றும் உள்ளூர் சிவில் சமூக அமைப்புகளும் பரிந்துரைகள் அல்லது ஆதரவு சேவைகள் மூலம் ஆலோசனை வழங்குகின்றன. எனினும், தரமான உளவியல் சமூக ஆதரவினை வழங்குவதில் பற்றாக்குறை நிலவுகிறது. மாவட்ட செயலகத்தில் அரச ஆலோசனை சேவைகளின் ஒரு பகுதியாக இணைக்கப்பட்டுள்ள உளவள ஆலோசனை உதவியாளர்களுக்கு தொழில்நுட்ப ரீதியாக எளிதாக்கப்பட்ட பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறை (TFSGBV) தொடர்பான போதுமான அறிவும் புரிந்துணர்வும் இல்லை. மேலும் பாதிக்கப்பட்டவர்களுக்கான தேவையான கவனிப்பினை வழங்குவதற்கும், இரகசியத்தன்மையைப் பேணி உளவள ஆலோசனைகளை வழங்கக் கூடிய தனியான இட வசதிப் பற்றாக்குறையினாலும் பாதிக்கப்பட்டவர்கள் முறைப்பாடளிப்பதிலிருந்து கட்டுப்படுத்தப்படுள்ளனர்.[27]

## 4. அவசர உதவித் தொலைபேசிச் சேவைகள்

தொழில்நுட்ப ரீதியாக எளிதாக்கப்பட்ட பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறை (TFSGBV) தொடர்பான முறைப்பாடுகளை செய்வதற்கும் அத்தகைய முறைப்பாடுகளுக்கான ஆதரவைப் பெறுவதற்குமென பல்வேறு நிறுவனங்களால் நிறுவப்பட்ட பல உதவித் தொலைபேசி இலக்கங்கள் காணப்படுகின்றன. அவை

- பொலிஸார் மூன்று அவசர உதவிச் சேவை இலக்கங்களை கொண்டுள்ளது: பொலிஸ் அவசர உதவித் தொலைபேசிச் சேவை (119) வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கான தமிழ் மொழிமூல உதவித் தொலைபேசி இலக்கம் (107) மற்றும் சிறுவர் மற்றும் பெண்கள் துஷ்பிரயோக தடுப்பு பணியகத்தின் உதவித் தொலைபேசி இலக்கம் (109)[28]

---

[22] மே. கு. அதே நூற்பகுதியில

[23] ஐக்கிய நாடுகள் மக்கள் தொகை நிதியம் (UNFPA) மற்றும் ஐக்கிய நாடுகள் பெண்கள் அமைப்பு (UN Women) 'Research Study on Technology-Facilitated Violence experienced by Women and Marginalized Groups in Sri Lanka' (2025)

[24] மகளிர் மற்றும் சிறுவன் அலுவல்கள் அமைச்சு 'Women Development Officers', மே 8 ஆம் திகதி அணுகப்பட்டது.

[25] பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தருடனான நேர்காணல், கரைச்சி பிரதேச செயலகம், கிளிநொச்சி மாவட்டம்

[26] உளவள ஆலோசனை உதவியாளர் அவர்களுடனான நேர்காணல், காத்தான்குடி பிரதேச செயலகம், மட்டக்களப்பு மாவட்டம்

[27] சமத்துவம் மற்றும் நீதிக்கான நிலையம (CEJ) மற்றும் இக்வாலிட்டி நவ் (Equality Now) இணைந்து வழங்கிய 'Shadow Report to the United Nations Committee on the Elimination of Discrimination Against Women', இலங்கையின் 9வது காலகட்ட மதிப்பாய்வு (2025)

[28] இலங்கை தகவல் தொடர்பாடல் ஒழுங்குபடுத்தல்கள் ஆணைக்குழு 3 Digital Short Codes for Special Services

- இலங்கை கணினி அவசரகால தயார்நிலை குழு (SLCERT) இணையவழிக் குற்றங்கள் தொடர்பில் முறைப்பாடளிப்பதற்காக ஒரு உதவித் தொலைபேசி இலக்கத்தை (101) கொண்டுள்ளது.
- மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சானது பெண்களுக்கான அவசர உதவித் தொலைபேசி இலக்கம் (1938), தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையினது தேசிய சிறுவர் உதவித் தொலைபேசிச் சேவை (1929), மற்றும் சிறுவர் பாதுகாப்புச் செயலி போன்றவற்றைக் கொண்டு நடாத்துவதோடு அத்தகைய பாதுகாப்பு நடைமுறைகள் மூலம் இணையத்தளமூலமாக மேற்கொள்ளப்படுகின்ற வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் முறைப்பாடுகளை மேற்கொள்ள உதவுகின்றது.
- தேவை நாடும் பெண்கள் அமைப்பு (WIN) பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறையால் பாதிக்கப்பட்டவர்களுக்காக குறிப்பாக இருபத்திநான்கு மணி நேர உதவி தொலைபேசி எண்ணை (077 567 6555) கொண்டுள்ளது.

பொதுவான உளவளப் பிரச்சினைகளுக்கான ஆதரவை வழங்கும் சில உதவித் தொலைபேசி இலக்கச் சேவைகளும் உளவள ஆலோசனை ஆதரவை நாடுகின்ற தனிநபர்களுக்கும் தமது சேவைகளை வழங்குகின்றன: அவை

- தேசிய மனநல நிறுவனமானது தேசிய மனநல உதவித் தொலைபேசி இலக்கத்தைக் (1926) கொண்டு நடத்துகிறது.
- லங்கா லைஃப் லைன் (1375) என்பது தன்னார்வத் தொண்டர்களால் கொண்டு நடத்தப்படும் நெருக்கடி நேரங்களிலான ஆதரவு சேவையாகும்.
- உள்ளுறுதி காருண்யம் அர்ப்பணிப்பு நிறுவகம் (CCCline - 1333) மனநல மற்றும் ஆலோசனைச் சேவைகளை வழங்குகிறது.

## 5. சிவில் சமூக அமைப்புகள்

சிவில் சமூக அமைப்புகள் (CSOs) ஆலோசனை சேவைகளைப் பெறுவதற்கு வழிகோலுகின்றன மற்றும் பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர்களுக்கு சட்ட மற்றும் பிற சேவைகளுக்கான பரிந்துரைகளை வழங்குகின்றன. சில சந்தர்ப்பங்களில் சிவில் சமூக அமைப்புகள் பொலிஸ் முறைப்பாடுகளை மேற்கொள்வதற்காக பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர்களுடன் பொலிஸ் நிலையங்களுக்கு கூட செல்கின்றன. அவ்வாறு ஒரு வெளிவாரியான அமைப்பின் இருப்பு என்பது பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர்களினால் மேற்கொள்ளப்படுகின்ற முறைப்பாட்டுக்கு நம்பகத்தன்மையை அதிகரிக்கும். சமூக வலைதளங்களில் தீங்கு விளைவிக்கக் கூடிய உள்ளடக்கங்கள் பதிவிடப்படுகின்ற சந்தர்ப்பங்களில், மெட்டா (Meta) மற்றும் டிக்டாக் (TikTok) போன்ற சில தளங்களில் ‘நம்பகமான பங்காளர்’ அந்தஸ்தை கொண்டுள்ள ஹேஷ்டேக் ஜெனரேஷன் (Hashtag Generation) மற்றும் ஹிதவதி (Hithawathi) போன்ற அரச சாரா நபர்களின் உதவியுடன் சமூக வலைத்தளத்தில் பதிவிடப்பட்டுள்ள உள்ளடக்கத்தை விரைவாக நீக்குவது சாத்தியமாகிறது.[29]

## 3.1 சேவைகளை அணுகுவதிலுள்ள சவால்கள்

மேற்கூறப்பட்ட சேவைகள் பாதிக்கப்பட்டு தப்பிப்பிழைத்தோருக்காக காணப்படுகின்றபோதிலும், தொழில்நுட்ப நிபுணத்துவப் பற்றாக்குறை பால்நிலைக் கூருணர்வினமை மற்றும் பாதிக்கப்பட்டவரை மையமாகக் கொண்ட பராமரிப்பை வழங்குவதில் உள்ள அறிவுத் தேக்கங்கள் பாதிக்கப்பட்டவரை குற்றஞ்சாட்டுவதற்கும் இழிவுபடுத்துவதற்கும் வழிவகுக்கும் கலாச்சார மற்றும் சமூகசார்பான நிலமைகள் மற்றும் விரும்பிய மொழிகளில் சேவைகளைப் பெற்றுக்கொள்வதில் உள்ள வரையறுக்கப்பட்ட அணுகல் நிலைமை போன்ற சவால்கள் தொடர்ந்து காணப்படுகின்றன.

ஐக்கிய நாடுகள் மக்கள்தொகை நிதியம் (UNFPA) மற்றும் ஐக்கிய நாடுகள் பெண்கள் அமைப்பு (UN Women) நடத்திய ஒரு சமீபத்திய ஆய்வில் பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர்கள் தொழில்நுட்ப ரீதியாக எளிதாக்கப்பட்ட பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறையை புகாரளிப்பதை

[29] ஐக்கிய நாடுகள் மக்கள் தொகை நிதியம் (UNFPA) மற்றும் ஐக்கிய நாடுகள் பெண்கள் அமைப்பு (UN Women) ‘Research Study on Technology-Facilitated Violence experienced by Women and Marginalized Groups in Sri Lanka’ (2025)

பல காரணிகள் தடுக்கின்றன என கண்டறிந்தன: பாதிக்கப்பட்டவரை மேலும் குற்றஞ்சாட்டுவது மற்றும் சமூகக் களங்கம் ஏற்படும் என்ற அச்சம், உத்தியோகத்தர்கள் மீதான நம்பிக்கையின்மை, உளவியல் சமூக ஆதரவைப் பெறுவதில் உள்ள வரையறைகள், தீர்வினைப் பெறுவதற்கு நீண்ட காலம் எடுக்கும் சட்ட நடைமுறைகள், முறைப்பாடளிக்கும் வழிமுறைகள் தொடர்பான பொது விழிப்புணர்வின்மை மற்றும் குடும்ப ஆதரவின்மை ஆகியன இதில் அடங்கும[30] பாதிக்கப்பட்டவர்கள் தேவையான நடவடிக்கைகள் எடுப்பதில் சேவை வழங்குநர்களான உத்தியோகத்தர்கள் பயனற்றவர்களாக இருப்பதாக கண்டறிந்தனர். மேலும்,'39 சதவீதம் பேர் பொலிஸிடம் செல்ல பயந்தனர், மற்றும் 41 சதவீதம் பேர் தனிப்பட்ட தகவல்கள் பகிரப்படும் என அஞ்சினர்.'[31] பால்நிலைக் கூருணர்வுள்ள சட்ட உதவி, உளவியல் சமூக சேவைகள் மற்றும் பாதுகாப்பான முறைப்பாடளிப்பு வழிமுறைகளை அணுகுவதில் உள்ள பற்றாக்குறையும் குறைவான முறைப்பாடளிப்புக்கு பங்களித்தது என்று அறிக்கை கண்டறிந்தது.[32] மேலும், உளவள ஆலோசனை சேவைகள் பற்றிய பாதிக்கப்பட்டவர்களின் விழிப்புணர்வும் பயன்பாடும் மிகவும் குறைவாக காணப்படுகின்றது என்பது 5.7% என பதிவாகியுள்ளது.[33]

மேலும், முறைப்பாடுகள் மற்றும் சம்பவ அறிக்கைகளுக்கென மையப்படுத்தப்பட்ட மற்றும் பாதுகாப்பான தரவு முகாமைத்துவ அமைப்பினது பற்றாக்குறை காரணமாக சேவை வழங்கல் தடைபடுகின்றதோடு, இது முறைப்பாடுகள் தீர்க்கப்படாமல் இரட்டிப்பாகுவதற்கு[34] வழிவகுத்துள்ளது. தொழில்நுட்ப ரீதியாக எளிதாக்கப்பட்ட பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறை (TFSGBV) வழக்குகளில் நிலைப்படுத்தப்பட்ட முறைப்பாட்டு நடைமுறையின் பற்றாக்குறையும் அமைப்புகளுக்கிடையேயான வரையறுக்கப்பட்ட ஒத்துழைப்பும் பயனுள்ள பதில்கள் கிடைப்பதைத் தடைசெய்கின்றன.

தொழில்நுட்ப ரீதியாக எளிதாக்கப்பட்ட பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறை (TFSGBV) தொடர்பில் உள்வாங்கப்படவில்லை எனத் தெரியவருகின்றது.[35] எனினும், இலங்கையில் பால்நிலை அடிப்படையிலான வன்முறையை கையாள்வதற்கான மிக சமீபத்திய தேசிய செயல் திட்டத்தின் மூலம், 'தொழில்நுட்ப ரீதியாக எளிதாக்கப்பட்ட பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறை (TFSGBV) மற்றும் பிற உருவாகி வரும் பால்நிலை அடிப்படையிலான வன்முறை[36] சிக்கல்களை தொடர்பிலான பயிற்சிநெறியை சேர்க்கும் வகையில் மித்துரு பியசா ஊழியர்களுக்கான தற்போதுள்ள பயிற்சிநெறிமுறை மற்றும் பயிற்சி தொகுதியை மதிப்பாய்வு செய்து புதுப்பிப்பதற்காக' இலக்கினை நிர்ணயித்துள்ளது. இந்த திட்டம் பொதுவான பால்நிலை அடிப்படையிலான வன்முறையை கையாள்வது குறித்து மேலும் விரிவாக கூறுகிறது: 'ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி செயற்திட்ட அமைப்பின் (UNDP) இன் தொழில்நுட்ப உதவியுடன் உருவாக்கப்பட்ட ஒரு விரிவான கையேட்டைப் பயன்படுத்தி, பால்நிலை அடிப்படையிலான வன்முறை தொடர்பான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள அனைத்து பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் ஆலோசகர்களுக்கும் துணை சட்ட பயிற்சி வழங்கப்படும்.' எனவும் குறிப்பிடுகின்றது.[37]

30 மே. கு. அதே நூற்பகுதியில்

31 மே. கு. அதே நூற்பகுதியில்இ 5.

32 மே. கு. அதே நூற்பகுதியில்இ 12.

33 மே. கு. அதே நூற்பகுதியில்இ 45.

34 மே. கு. அதே நூற்பகுதியில்இ 46.

35 சமத்துவம் மற்றும் நீதிக்கான நிலையம (CEJ) மற்றும் இக்வாலிட்டி நவ; (Equality Now) இணைந்து வழங்கிய, 'Shadow Report to the United Nations Committee on the Elimination of Discrimination Against Women', இலங்கையின் 9வது பருவகால மதிப்பாய்வு (2025)

36 மகளிர் மற்றும் சிறுவன் அலுவல்கள் மற்றும் சமூக மேம்பாட்டு அமைச்சு, The Multi-Sectoral National Action Plan to Address Sexual and Gender-Based Violence (SGBV) in Sri Lanka – Phase II (2024–2028), பக்கம் 181

37 மே. கு. அதே நூற்பகுதியில்

# 4. ஆய்வு முடிவுகள்

இந்த அத்தியாயம் சமத்துவம் மற்றும் நீதிக்கான நிலையத்தினால் (CEJ) முன்னெடுக்கப்பட்ட வரைபட கற்கையின் முடிவுகளை மையமாக கொண்டுள்ளது. இந்தக் கற்கையானது அதில் பங்கேற்ற பெண்கள் எதிர்கொண்ட தொழில்நுட்ப ரீதியாக எளிதாக்கப்பட்ட பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறையின் (TFSGBV) வகையையும் அதன் பரந்த தன்மையையும் பற்றிய ஒரு கண்ணோட்டத்தை வழங்குகிறது மற்றும் தொழில்நுட்ப ரீதியாக எளிதாக்கப்பட்ட பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறை (TFSGBV) வழக்குகளை கையாளுகின்ற சேவை வழங்குகின்ற நிறுவனங்களில் உள்ள மனித வள வெற்றிடங்களையும் கண்டறிவதோடு இத்தகைய வெற்றிடங்கள் மாவட்ட வாரியாக கண்டறியப்பட்டு வரைபடமாக்கப்பட்டுள்ளன.

## 4.1. பெண்கள் எதிர்கொண்ட தொழில்நுட்ப ரீதியாக எளிதாக்கப்பட்ட பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறையின் (TFSGBV) வகையும் அதன் பரந்த தன்மையும்

குறித்த கணக்கெடுப்பில் பதிலளித்த 175 பேரில் பெரும்பாலானோர் ஓரங்கட்டப்பட்ட அல்லது குறைவாக பிரதிநிதித்துவப்படுத்தப்பட்ட சமூகங்களை சேர்ந்தவர்களாக காணப்பட்டனர். 50 சதவீதத்திற்கும் அதிகமானோர் குறைந்த வருமானம் பெறும் சமூகத்தை சேர்ந்தவர்களாக (96 பேர்) இருந்தனர் மற்றும் 50 சதவீதத்திற்கும் அதிகமானோர் மத அல்லது இன அடிப்படையில் சிறுபான்மை சமூகத்தை சேர்ந்தவர்களாக காணப்பட்டனர். மேலும், பதிலளித்தவர்களில் சிலர் பன்முக பாலியல் நோக்குநிலை, பால்நிலை அடையாளம் மற்றும் வெளிப்பாடு, மற்றும் பால்நிலைப் பண்புகளை கொண்டவர்களாக (25 பேர்) தங்களை அடையாளப்படுத்திக்கொண்டனர், மேலும் மாற்றுத்திறனாளி நபர்களும் (4 பேர்) காணப்பட்டதோடு, பெண் தலைமை தாங்கும் குடும்ப உறுப்பினர்களும் (3 பேர்) பங்கு பற்றினர், மற்றும் பழங்குடி சமூகத்தைச் சேர்ந்த ஒருவரும் பங்கேற்றார்..

சமூகத்தில் ஓரங்கட்டப்பட்ட பின்னணிகளும் பெண்கள் சேவைகளைப் பெற்றுக்கொள்வதில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. உதாரணமாக, ஒரு வீட்டுப் பணிப்பெண் கூறினார்,

> "எங்களது கிராம சேவை உத்தியோகத்தர் என்னை சிறிதும் கவனத்தில் எடுத்துக்கொள்வதில்லை"[38] ஏனெனில் நான் கிராமத்தைச் சேர்ந்த ஒரு ஏழைப் பெண் என்பதால் தான் என நினைக்கிறேன்."

என்றார். பிரதேச செயலக உறுப்பினராக இருந்த மற்றொரு பெண், பேஸ்புக் மற்றும் வாட்ஸ்அப் மூலமான தாக்குதல்களுக்கு முகங்கொடுத்து பின்னர் பொலிஸில் முறைப்பாடு செய்தார். இதன் போது பொலிஸார்

> "பெண்கள் அரசியலில் நுழையும்போது, சமூக வலைதளங்களில் இத்தகைய பல சிக்கல்களை சந்திக்க நேரிடும்"[39]

கணக்கெடுப்பின் படி, பங்கேற்பாளர்கள் பல்வேறு வகையான தொழில்நுட்ப ரீதியாக எளிதாக்கப்பட்ட பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறைக்கு (TFSGBV) உள்ளாகியிருந்தனர் என்பதோடு பங்கேற்பாளர்களில் 30 சதவீதத்திற்கும் அதிகமானோர் இதை தினமும் அல்லது வாராந்த அடிப்படையில் அனுபவித்தனர். மிகவும் பொதுவாக

[38] தொழில்நுட்ப ரீதியாக எளிதாக்கப்பட்ட பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறையால் (TFSGBV) பாதிக்கப்பட்ட பெண், நயனா அவர்களுடனான நேர்காணல், அனுராதபுரம் மாவட்டம்

[39] தொழில்நுட்ப ரீதியாக எளிதாக்கப்பட்ட பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறையால் (TFSGBV) பாதிக்கப்பட்ட பெண், ராணி அவர்களுடனான நேர்காணல், புத்தளம் மாவட்டம்

அனுபவிக்கப்பட்ட வன்முறையின் வகைகளாக, இணையவழி மூலமான பால்நிலை ரீதியான வெறுப்புப் பேச்சு, இணக்கம் பெறப்படாத நெருக்கமான புகைப்படம் அல்லது காணொளிகளை பகிர்தல், மற்றும் விரும்பத்தகாத அல்லது புண்படுத்தும் உள்ளடக்கங்களை பெறுவது ஆகியவை அடங்கும். இதற்கு மேலதிகமாக, பொதுவாக தீங்கிழைக்கும் நோக்கத்துடன் இணையத்தில் (ஒரு குறிப்பிட்ட நபர்) பற்றிய தனிப்பட்ட இணையத்தில் (ஒரு குறிப்பிட்ட நபர்) பற்றிய தனிப்பட்ட அல்லது அடையாளம் காணும் தகவலைத் தேடி வெளியிடல், ஆள்மாறட்டம், இணையவழித் தொடர்தொல்லை, டிஜிட்டல் கண்காணிப்பு, பாலியல் துன்புறுத்தல், இணையவழி மிரட்டல், பால்நிலை அடிப்படையிலான இணையவழி தொல்லை, இணையவழி அச்சுறுத்தல், மாற்றியமைக்கப்பட்ட காணொளிகள் மற்றும் படங்கள் மற்றும் சமூகஊடக கணக்கு திருட்டு ஆகியவற்றுக்கும் உள்ளாக்கப்பட்டனர். தொழில்நுட்ப ரீதியாக எளிதாக்கப்பட்ட பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறையினால் (TFSGBV) பாதிக்கப்பட்ட பெண்களுடனான நேர்காணல்களிலும் (KIIs) இதே போன்ற முறைப்பாடுகள் தெரிவிக்கப்பட்டன.

**அட்டவணை 4.1.1:** பாதிக்கப்பட்டவர்களினால் அனுபவிக்கப்பட்ட தொழில்நுட்ப ரீதியாக எளிதாக்கப்பட்ட பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறையின் (TFSGBV) வகைகள்




**அட்டவணை 4.1.2:** தொழில்நுட்ப ரீதியாக எளிதாக்கப்பட்ட பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறையின் (TFSGBV) நிகழ்தகவு



தொழில்நுட்ப ரீதியாக எளிதாக்கப்பட்ட பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறைக்கு (TFSGBV) உள்ளான பங்கேற்பாளர்கள் தாங்கள் பல்வேறு தளங்கள் மூலம் வன்முறைக்கு உள்ளாக்கப்பட்டதாக தெரிவித்தனர். இதில் முக்கியமாக 133 பேர் வாட்ஸ்அப் செயலி மூலமும் மற்றும் 58 பேர் பேஸ்புக் மற்றும் மெசஞ்சர் ஆகிய தளங்கள் மூலமும் அதிகளவில் இடம்பெற்றுள்ளதாக குறிப்பிட்டனர். இந்த இரண்டு தளங்களும் இலங்கையில் மிகவும் அதிகமாக பயன்படுத்தப்படும் தளங்களாக இருப்பதே இதற்கு முக்கிய காரணமாக கருதப்படுகிறது.

**அட்டவணை 4.1.3:** தொழில்நுட்ப ரீதியாக எளிதாக்கப்பட்ட பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறை (TFSGBV) இடம்பெற்ற தளங்கள்




ஆய்வில் கிடைக்கப்பெற்ற பதில்கள் குறிப்பிடுவதன்படி, தொழில்நுட்ப ரீதியாக எளிதாக்கப்பட்ட பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறையின் (TFSGBV) மிக பொதுவான குற்றவாளிகளாக 66% பேர் பாதிக்கப்பட்டவர்களின் வாழ்க்கைத்துணை/பங்காளராகவும் அல்லது 67% பேர் பாதிக்கப்பட்டவர்களுக்கு பழக்கமில்லாத நபர்களாகவும் காணப்படுவதோடு அந்த வரிசையைத் தொடர்ந்து 42% பேர் பாதிக்கப்பட்டவர்களின் நண்பர் அல்லது சக பணியாளர் அல்லது அயலவர்களாக காணப்படுகின்றனர். ஒரு பங்கேற்பாளர் தொழில்நுட்ப ரீதியாக எளிதாக்கப்பட்ட பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறையானது (TFSGBV) ஒரு பொலிஸ் உத்தியோகத்தரால் இழைக்கப்பட்டதாக தெரிவித்ததோடு மற்றொரு பங்கேற்பாளர் தொழில்நுட்ப ரீதியாக எளிதாக்கப்பட்ட பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறையானது (TFSGBV) சமூகத்தில் செல்வாக்கு மிக்க ஒரு நபரால் இழைக்கப்பட்டதாக தெரிவித்தார்.

**அட்டவணை 4.1.4:** தொழில்நுட்ப ரீதியாக எளிதாக்கப்பட்ட பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறைக் (TFSGBV) குற்றவாளிகள்




கணக்கெடுப்பில் பங்கேற்ற பெண்கள் தொழில்நுட்ப ரீதியாக எளிதாக்கப்பட்ட பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறையின் (TFSGBV) விளைவாக பல்வேறு பாதிப்புகளை தாங்கள் அனுபவித்ததாகவும் தெரிவித்தனர். கிட்டத்தட்ட 97.1% ஆன அனைத்து பங்கேற்பாளர்களும் உளவியல் ரீதியான பாதிப்புகளை தாங்கள் அனுபவித்தாக தெரிவித்தனர். உடல், உள மற்றும் பொருளாதார அல்லது தொழில்முறை பாதிப்புகள், சமூக களங்கம் மற்றும் சமூக, இணையதிலிருந்து ஒதுக்கி வைக்கப்படும் தன்மை, இணையவெளிக்கு வெளியே ஏற்படும் தாக்கங்கள், கட்டுப்படுத்தப்பட்ட சுதந்திரம் மற்றும் தனிப்பட்ட உறவுகளுக்கு ஏற்படும் சேதம் ஆகியவையும் பங்கேற்பாளர்களால் அடையாளம் காணப்பட்ட ஏனைய விளைவுகளாகும்.

**அட்டவணை 4.1.5:** தொழில்நுட்ப ரீதியாக எளிதாக்கப்பட்ட பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறையின் (TFSGBV) காரணமாக பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர்கள் அனுபவித்த விளைவுகள்



## 4.2 தொழில்நுட்ப ரீதியாக எளிதாக்கப்பட்ட பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறை (TFSGBV) தொடர்பான சேவை வழங்கலுக்குத் தேவையான மனித வளத்தில் உள்ள இடைவெளிகள்

இந்தக் கற்கையின் போது பங்கேற்பாளர்களில் 93.7% பேர் தொழில்நுட்ப ரீதியாக எளிதாக்கப்பட்ட பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறை (TFSGBV) தொடர்பில் ஆதரவை நாடினர் அல்லது முறைப்பாடு அளித்தனர். அதே நேரத்தில் 6.3மூ பேர் எந்த வகையான ஆதரவையும் நாடவில்லை. தொழில்நுட்ப ரீதியாக எளிதாக்கப்பட்ட பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறை (TFSGBV) பாதிக்கப்பட்ட பெண்களுடனான பிரதான நேர்காணல்களின் (KIIs) படி, பெண்கள் சேவை வழங்குநர்களை நம்பவில்லை என்றும், சம்பந்தப்பட்ட நிறுவனம் அல்லது பிரிவில் உள்ள அனைத்து உத்தியோகத்தர்களும் ஆண்களாக.[40] இருந்ததால் முறைப்பாடு அளிக்கவில்லை என்றும் தெரிவித்தனர். தர்ஷி என்ற ஒரு பெண், சமூகக் களங்கம் மற்றும் பாதிக்கப்பட்டவருக்கு எதிரான பழிவாங்கல.[41] செயற்பாடுகள் மேற்கொள்ளப்படும் என்ற அச்சத்தில் முறைப்பாடு செய்யவதிலிருந்து பின்வாங்க காரணமாக இருந்தது எனக் கூறினார். மேலும் அவர் குறித்த பிரச்சினையினால் தனது பிள்ளைகள் சமூகத்தால் ஒதுக்கப்படுவர்.[42] என்ற அச்சத்தில் முறைப்பாடு செய்யவில்லை என கூறினார். பாத்திமா என்ற மற்றொரு பெண், தான் வாழ்ந்த சமூகம், தனது குடும்பப் பின்னணி மற்றும் தான் அரசாங்க பணி வகிக்கின்றமை போன்ற காரணிகளால் தான் முறைப்பாடளிக்கவில்லை எனத் தெரிவித்தார்.[43]

பாதிக்கப்பட்ட பெண்கள் பல வழிகளில் ஆதரவுச் சேவைகள் மற்றும் அதற்கான நிவாரணத்தை நாடினர். ஆய்வில் பங்கேற்ற 110 பங்கேற்பாளர்கள் பொலிசாரை நாடினர் மற்றும் கிட்டத்தட்ட 78 பங்கேற்பாளர்கள், குடும்பத்தினர் மற்றும் நண்பர்கள் போன்ற முறைசாரா ஆதரவு வட்டத்தினரிடம் குறித்த பிரச்சினை தொடர்பில் கலந்துரையாடியதோடு மேலும் சட்ட உதவிச் சேவைகள், முஸ்லிம் பெண்கள் மேம்பாட்டு அறக்கட்டளை (MWDT), ராஜரட்ட பிரஜா கேந்திரய (RPK) மேலும் பெண்கள், ஆய்வு மற்றும் மேம்பாட்டிற்கான இஸ்லாமிய பெண்கள் சங்கம் (IWARE), தொழில்நுட்ப ரீதியாக எளிதாக்கப்பட்ட பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறை (TFSGBV) இடம்பெற்ற இணையவழி மூலமான ஊடகம், மனித உரிமைகள் ஆணைக்குழு (HRC), அவசர உதவித் தொலைபேசி இலக்கங்கள், மற்றும் பாதிக்கப்பட்டவர்களது பிரதேச செயலகங்கள் போன்றவற்றிடமிருந்தும் ஆதரவு நாடினர். கணக்கெடுப்பு முடிவுகளின்படி, பங்கேற்பாளர்களில் 51.6% பேர் வழங்கப்பட்ட சேவைகளில் திருப்தி அடைந்திருந்த அதேசமயம், 24.8% பேர் ஓரளவு திருப்தி அடைந்ததாக தெரிவித்ததோடு மற்றும் 23.6% பேர் வழங்கப்பட்ட சேவைகள் தொடர்பில் திருப்தியடையவில்லை. மேலும், பங்கேற்பாளர்களில் 24.5% பேர் மட்டுமே குறித்த சேவைகளை வழங்குவதற்குப் போதுமானளவு உத்தியோகத்தர்கள் காணப்படுகின்றனர் என நம்புகின்றனர், 42.6% பேர் சில நேரங்களில் மட்டுமே போதுமான உத்தியோகத்தர்கள் கிடைக்கின்றனர் எனப் பதிலளித்தனர், மற்றும் 32.9% பேர் போதுமானளவு உத்தியோகத்தர்கள் அரிதாகவே அல்லது ஒருபோதும் கிடைப்பதில்லை என்று தெரிவித்தனர்.

[40] தொழில்நுட்ப ரீதியாக எளிதாக்கப்பட்ட பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறையால் (TFSGBV) பாதிக்கப்பட்ட பெண், லதா அவர்களுடனான நேர்காணல், அனுராதபுரம் மாவட்டம்

[41] தொழில்நுட்ப ரீதியாக எளிதாக்கப்பட்ட பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறையால் (TFSGBV) பாதிக்கப்பட்ட பெண், தர்ஷி அவர்களுடனான நேர்காணல், புத்தளம் மாவட்டம்

[42] தொழில்நுட்ப ரீதியாக எளிதாக்கப்பட்ட பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறையால் (TFSGBV) பாதிக்கப்பட்ட பெண், தர்ஷி அவர்களுடனான நேர்காணல், புத்தளம் மாவட்டம்

[43] தொழில்நுட்ப ரீதியாக எளிதாக்கப்பட்ட பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறையால் (TFSGBV) பாதிக்கப்பட்ட பெண், பாத்திமா அவர்களுடனான நேர்காணல், புத்தளம் மாவட்டம்

**அட்டவணை 4.2.1:** நாடப்பட்ட ஆதரவுச் சேவைகள் மற்றும் பெற்றுக்கொள்ளப்பட்ட ஆதரவு முறைகள்




**அட்டவணை 4.2.2:** வழங்கப்பட்ட சேவையில் காணப்படும் திருப்தி நிலை




**அட்டவணை 4.2.3:** தேவையான உத்தியோகத்தர்களின் இருப்பு



கணக்கெடுப்பு முடிவுகள் மேலும் சுட்டிக் காட்டுவதென்னவென்றால், பெண்கள் ஆதரவு சேவைகளை பெறுவதில் பல சிரமங்களை எதிர்கொண்டனர். பொதுவாக அனுபவிக்கப்பட்ட சிரமங்கள் என்னவெனில், பலரிடம் அனுபவத்தை மீண்டும் மீண்டும் கூற வேண்டியிருந்தது (101 பேர்) மற்றும் நீண்ட காத்திருப்பு நேரங்கள் (96 பேர்) ஆகும். பலர் பெண் உத்தியோகத்தர்களின் பற்றாக்குறை (58 பேர்), தொழில்நுட்ப ரீதியாக எளிதாக்கப்பட்ட பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறை தொடர்பில் பயிற்சி பெற்ற உத்தியோகத்தர்களின் பற்றாக்குறை (54 பேர்) மற்றும் தங்கள் விரும்பிய மொழியில் தொடர்பு கொள்ளக்கூடிய உத்தியோகத்தர்களின் பற்றாக்குறை (58 பேர்) ஆகியவற்றையும் எதிர்கொண்டனர். இந்த ஆய்வுக்காக நேர்காணல் செய்யப்பட்ட சரளா கூறினார்,

"ஒரு பெண் உத்தியோகத்தர் ஆதரவளிப்பார் என்று நினைத்தேன், ஆனால் முறைப்பாடானது ஒரு ஆண் மூலம் எழுதப்பட்டதால், அவர்கள் என்னை மதிப்பற்ற ஒரு பொருளாக பார்த்தனர். மேலும் என்னை ஒரு குற்றவாளியைப் போல பார்த்தனர். குறிப்பாக நான் ஒரு பெண் என்பதால், தொலைபேசி மூலம் நடக்கும் பிரச்சினைகளை நாமே உருவாக்கிய பிரச்சினைகளாக அவர்கள் பார்க்கின்றனர்' என்னிடம் கேள்விகள் கேட்கும் போது, அந்த நபர் வேறு ஏதோ செய்தார், அதை வேண்டுமென்றே செய்தார் - என்னை எல்லாரின் முன்னிலையிலும் விசாரித்தார். அதற்கு பிறகு பொலிஸ் நிலையத்திற்கு செல்லக் கூடாது என்று நினைத்தேன்."[44]

**அட்டவணை 4.2.4:** ஆதரவினை நாடும்போது எதிர்கொண்ட சிரமங்கள்




[44] ஐவெநசஎநைற றவைா ளுயசயடயஇ றழஅயெ ஊைியஉவநன டில வுகுளுபுடீஏஇ யுரெசயனாயிரசய

**அட்டவணை 4.2.5:** சேவை வழங்குநர்களிடம் சேவைகளை பெற்றுக்கொண்ட போது பங்கேற்பாளர்களினால் உணரப்பட்ட பண்புகள்




மேலும், 12.8% ஆன பங்கேற்பாளர்கள் தாங்கள் விரும்பிய மொழியில் சேவைகளைப் பெற்றுக்கொள்ள முடியவில்லை எனவும் மற்றும் 30.1% ஆன பங்கேற்பாளர்கள் பேர் தங்கள் விரும்பிய மொழியில் சேவைகளை ஓரளவு மட்டுமே பெற முடிந்தது.

பெரும்பாலான பங்கேற்பாளர்கள் தொழில்நுட்ப ரீதியாக எளிதாக்கப்பட்ட பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறை (TFSGBV) வழக்குகளை கையாள்வதற்கு சேவை வழங்குநர்கள் தேவையான பயிற்சிநெறிகள் மூலம் முழுமையாக தயார்படுத்தப்படவில்லை எனக் கருதினர் என்பதை இந்த கணக்கெடுப்பானது மேலும் சுட்டிக்காட்டுகின்றது.

குறித்த கணக்கெடுப்பில் பதிலளித்தவர்களில் 17.8% ஆன பங்கேற்பாளர்கள் மட்டுமே சேவை வழங்குநர்களான உத்தியோகத்தர்கள் பயிற்சி பெற்றவர்கள் என்று உறுதியாக நம்பினர், மற்றும் 43.4% ஆன பங்கேற்பாளர்கள் உத்தியோகத்தர்கள் ஓரளவு மட்டுமே பயிற்சி பெற்றவர்கள் என நம்பினர். 38.8% ஆன பங்கேற்பாளர்கள் குறித்த உத்தியோகத்தர்கள் மிகவும் குறைந்த அளவிலான அல்லது எவ்விதமான பயிற்சிநெறியையும் பெற்றிருக்கவில்லை என நம்பினர்.

**அட்டவணை 4.2.6:**
உத்தியோகத்தர்களுக்கு க் காணப்படும் பயிற்சியின் அளவு



கீழ்வரும் பகுதியில், ஆய்வு நடத்தப்பட்ட ஐந்து மாவட்டங்களில் கண்டறியப்பட்ட மனிதவளத்தில் உள்ள குறைபாடுகளைச் சுட்டிக்காட்டியுள்ளது. பொலிஸ் சேவையிலுள்ள குறைபாடுகளை அனைத்து மாவட்டங்களிலிருந்தும் பதிலளித்தவர்கள் கூறினர். பிரதானமாக மூன்று வகையான இடைவெளிகள் சுட்டிக்காட்டப்பட்டன: (I) புகார் அளிக்க பெண் உத்தியோகத்தர்கள் இல்லாமை அல்லது பெண் உத்தியோகத்தர்களை அணுகுவதில் உள்ள சிரமம் (II) தமிழ் பேசும் உத்தியோகத்தர்கள் இல்லாமை (III) டிஜிட்டல் பாதுகாப்பு குறித்த தொழில்நுட்ப அறிவு இல்லாமை.

## 4.2.1 அநுராதபுரம்

தொழிநுட்ப அடிப்படையிலான பாலியல் மற்றும் பால்நிலை வன்முறைச் (TFSGBV) சம்பவங்களை முறையிடுவதற்கு பெண் பொலிஸ் உத்தியோகத்தர்கள் இல்லாதிருந்தமை அநுராதபுர பொலிஸ் சேவைகளில் இங்காணப்பட்ட ஒரு விசேட குறைபாடாகும். ஒரு பெண் தான் ஒரு முறைப்பாட்டினை தாக்கல் செய்வதற்கு பொலிஸ் நிலையத்திற்குச் சென்றபோது, அங்கு பெண் பொலிஸ் உத்தியோகத்தர்கள் இருந்தாலும் கூட, குறித்த அப்பெண், உத்தியோகத்தர்களிடம் தனது முறைப்பாட்டை மேற்கொள்ளமுடியவில்லை எனக் குறிப்பிடுகின்றார். அங்கு தனது தனிப்பட்ட விடயங்களை பேணுவதற்கு சந்தர்ப்பம் இருக்கவில்லை என்றும், அனைவரதும் முன்னிலையிலே ஆண் பொலிஸ் உத்தியோகத்தரிடம் குறித்த முறைப்பாட்டினை செய்யுமாறு தான் நிர்ப்பந்திக்கப்பட்டதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.[45] மேலும், எந்த மொழியிலும், எந்நேரத்திலும் அழைக்கக்கூடியவாறான பொலிஸ் துரித அழைப்பு வசதியொன்று காணப்பட்டாலும், அங்கு அழைப்புகளுக்கு பதிலளிப்பதற்கு ஆண் பொலிஸ் உத்தியோகத்தர்கள் மட்டுமே பணியில் அமர்த்தப்பட்டுள்ளார்கள்.[46] கல்கிரியகம பொலிஸ் நிலையத்தில், பெண்கள் மற்றும் சிறுவர் பிரிவு காணப்படுகின்றது. என்றாலும், அங்கு பணியாளர் பற்றாக்குறை நிலவுவதுடன் இரண்டு உத்தியோகத்தர்கள் மாத்திரமே காணப்படுகின்றனர்.[47] அங்கு தமிழ் பேசும் உத்தியோகத்தர்களுக்கு பற்றாக்குறை நிலவுகின்ற அதேவேளை, சில நிலையங்களில் சிங்களம் பேசுகின்ற 3-4 உத்தியோகத்தர்கள் காணப்படுகின்றனர் எனவும் ஒரு உத்தியோகத்தர் குறிப்பிட்டார்.[48] அத்துடன், பொலிஸ் நிலையத்தில் உளவள ஆலோசனையாளர்கள் இல்லாமையினால்,[49] உளவள ஆலோசனைகள் தேவைப்படுகின்ற சமயங்களில், பெண்கள் பிரதேச செயலகத்திற்கோ அல்லது கெக்கிராவ பிரதேச வைத்தியசாலையில் உள்ள வைத்தியர்களிடமோ அனுப்பிவைக்கப்படுகின்றனர்.[50]

பிரதேச செயலகமானது மத்தியஸ்த உறுப்பினர்கள் மற்றும் மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் (WDOs) ஊடாக, இலவச உளவள ஆலோசனைகள் வழங்கியும் இணைய வழி குற்றப் பிரிவுக்கு ஆற்றுப்படுத்தியும் தொழிநுட்ப அடிப்படையிலான பாலியல் மற்றும் பால்நிலை வன்முறைகளால் பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தப் பெண்களுக்கு உதவுகின்றது.[51] மத்தியஸ்தசபை உறுப்பினர்கள் தாமாக ஏற்படுத்திய நிகழ்ச்சித்திட்டங்களின் உதவியுடன் விழிப்புணர்வு செயற்திட்டங்களை உருவாக்கியும், தேவையான பரிந்துரைகளை வழங்கியும் செயற்பாடுகளை தொடர்ச்சியாக ஒருங்கிணைத்தும் உதவுகின்றனர். அவர்கள் நாடளாவியரீதியில் இயக்கப்படும் முகநூல் (Facebook) பக்கம் வாயிலாக தொழிநுட்ப அடிப்படையிலான பாலியல் மற்றும் பால்நிலை வன்முறைகள் குறித்து பெற்றுக்கொள்ளப்பட்ட முறைப்பாடுகளுக்கும் எதிர்வினையாற்றுகின்றனர்.[52] முகநூல் பக்கத்தினூடாக ஒரு நாளைக்கு 24 மணிநேரமும் ஒத்துழைப்புக்களும் ஆதரவும் வழங்கப்படுவதுடன், பயனாளர்களுக்கு பதிலளிப்பதற்கென அண்ணளவாக 25-30 உத்தியோகத்தர்கள் பணியிலமர்த்தப்பட்டுள்ளனர்.[53] ஒரு மத்தியஸ்தசபை உறுப்பினர் கூறியவாறு பாதிக்கப்பட்டப் பெண்களுக்கு உதவுவதற்காக ஐந்து உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். அவர்களுள் நான்கு

[45] சரளாவுடனான நேர்காணல், தொழில்நுட்ப ரீதியாக எளிதாக்கப்பட்ட பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன் வன்முறையால் (TFSGBV); பாதிக்கப்பட்ட பெண், அநுராதபுரம்

[46] பெண் பொலிஸ் அதிகாரியுடனான நேர்காணல், அநுராதபுரம்

[47] பெண் பொலிஸ் அதிகாரியுடனான நேர்காணல், அநுராதபுரம்

[48] பெண் பொலிஸ் அதிகாரியுடனான நேர்காணல், அநுராதபுரம்

[49] அக்கறைதாரர்களுடன் இலக்குக் குழு கலந்துரையாடல்கள், அநுராதபுரம்

[50] பெண் பொலிஸ் அதிகாரியுடனான நேர்காணல், அநுராதபுரம்

[51] மத்தியஸ்த சபை உத்தியோகத்தருடனான நேர்காணல், பிரதேச செயலகம், அநுராதபுரமட

[52] மத்தியஸ்த சபை உத்தியோகத்தருடனான நேர்காணல், பிரதேச செயலகம், அநுராதபுரம் மத்தியஸ்தங்களில், பிணக்கொன்று எழுகின்றபோது, அது பிணக்கிற்குள்ளான தரப்பினரால் தெரிவுசெய்யப்பட்ட குழு உறுப்பினர்களை உள்ளடக்கிய மத்தியஸ்த சபைக்கு ஆற்றுப்படுத்தப்படும். 'மத்தியஸ்த சபைகள் ஆணைக்குழு' 11 ஆம 2026 அன்று அணுகப்பட்டது.

[53] மத்தியஸ்த சபை உத்தியோகத்தருடனான நேர்காணல், பிரதேச செயலகம், அநுராதபுரம்

உத்தியோகத்தர்கள் பெண்களாவர்.[54] மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர்களை பெண்கள் மற்றும் சிறுவர் விவகார அமைச்சினால் செயற்படுத்தப்படும் 1938 எனும் துரித தொலைபேசி இலக்கத்தின் ஊடாகத் தொடர்புகொள்ளலாம். எனினும், இத்துரித அழைப்புச்சேவை எதிர்வினையாற்றுவதில் மெத்தனமாகக் காணப்படுகின்றது என்பதும் குறிப்பிடப்பட்டது.[55]

பிரதேச செயலகங்களில் பெண்களின் தனியுரிமை மற்றும் இரகசியத்தன்மையைப் பாதுகாக்க தனியான உளவள ஆலோசனை அறை உள்ளது.[56] அங்கு மொழிபெயர்ப்பு உதவிகளை வழங்குவதற்கு இரண்டு தமிழ் பேசும் உத்தியோகத்தர்கள் காணப்படுகின்றனர்.[57] தொழிநுட்ப அடிப்படையிலான பாலியல் மற்றும் பால்நிலை வன்முறைகள் குறித்த விழிப்புணர்வு அமர்வுகளை நடாத்தக்கூடிய பயிற்றப்பட்ட உத்தியோகத்தர்கள் தேவைப்படுகின்றனர்.[58] எனினும், பயிற்சி வாய்ப்புக்களைப் பெற்றுக்கொள்வதற்கு போதியளவு நிதி காணப்படுவதில்லை.

பெண்களுக்கு வாரத்தின் ஏழு நாட்களும் 24 மணித்தியாலங்களும் இயங்கும் அவற்றின் துரித அழைப்புச் சேவைகள் ஊடாக சட்ட உதவி ஆணைக்குழுவை அணுகக்கூடியதாக இருந்தாலும், அங்கும் போதுமானளவு பணியாட்கள் காணப்படுவதில்லை.[59] துரித அழைப்புக்களை கையாளுவதற்கு ஆண் மற்றும் பெண்கள் என இரு பாலாரும் குறித்தொதுக்கப்பட்டுள்ளதுடன், ஒருவருக்கு தனது முறைப்பாடுகளை மேற்கொள்வதற்கு அல்லது ஆலோசனைகளைப் பெறுவதற்கு ஒரு பெண் உத்தியோகத்தர் தேவை என கோரிக்கை விடுத்தால், அந்த கோரிக்கைக்கு பதிலளிக்கும் விதத்தில் ஒரு பெண் உத்தியோகத்தரின் உதவியைப் பெற்றுக்கொடுக்க முடியும்.[60] தொழிநுட்ப அடிப்படையிலான பாலியல் மற்றும் பால்நிலை வன்முறைகள் குறித்த நிறுவனமயப்பட்ட பயிற்சிகள் வழங்கப்படுவதில்லை. இதனால், சட்ட உதவி நிலைய உத்தியோகத்தர்கள் அத்தகையப் பயிற்சிகளை தனிப்பட்ட ரீதியாக தொடருகின்றனர். அங்கு தமிழ் பேசும் உத்தியோகத்தர்கள் காணப்படவில்லை என்பதுடன், அதற்குப் பதிலாக, தமிழ் பேசும் இரு இளம் சட்டத்தரணிகளது உதவி பெறப்பட்டுள்ளது.[61]

மேலும், பொலிஸ், பிரதேச செயலகம், மற்றும் சட்ட உதவி நிலையம் போன்ற சேவை வழங்கும் நிறுவனங்களின் உத்தியோகத்தர்களுக்கு போதியளவு பயிற்சிகள் வழங்கப்படுவதில்லை என்றும் இவ்வாய்வினூடாக அவதானிக்கப்பட்டுள்ளது. ரஜரட்ட பிரஜா கேந்திரய (RPK) போன்ற அரச சார்பற்ற நிறுவனங்களினூடாக பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன. எனினும், அத்தகைய பயிற்சிகளிற்கு சமூகமளிக்கும் போது அவர்களுக்கு விடுமுறைகளுக்கு விண்ணப்பித்து அங்கீகாரம் பெற்றுக்கொள்ளல், தமது வேலைகளை நிறைவேற்றுவதற்கு பதிலாக வேறு உத்தியோக்கத்தர்களை ஏற்பாடு செய்தல், மற்றும் போக்குவரத்து செலவுகளுக்கான போதியளவு நிதி ஒதுக்கீடுகள் இல்லாமை போன்ற பல சவால்களை எதிர்கொள்ள வேண்டியிருந்ததாக அவர்கள் குறிப்பிட்டனர். உதாரணமாக, மகளிர் மற்றும் சிறுவர் பிரிவின் பொலிஸ் உத்தியோகத்தர்களைப் பொறுத்தமட்டில், அத்தகையப் பயிற்சிகளில் பங்கேற்பதற்கு பிரதி பொலிஸ்மா அதிபரின் எழுத்துமூல அனுமதி தேவைப்படுகின்றது.[62]

அரச சார்பற்ற சேவை நிலையங்கள் தொழிநுட்ப அடிப்படையிலான பாலியல் மற்றும் பால்நிலை வன்முறைகளுக்கு தீர்வுகளை முன்வைப்பதில் மிகவும் முக்கியமான வகிபாகத்தை நிறைவேற்றுகின்றன. உதாரணமாக, பொலிஸ், நீதிமன்றங்கள், பிரதேச செயலகம் மற்றும் பொதுமக்களும் கூட வன்முறைகளிலிருந்து தப்பிப் பிழைத்தோரை உள்;ர் பெண்கள் அமைப்பான ரஜரட்ட பிரஜா கேந்திரய நிலையத்திற்கு ஆற்றுப்படுத்துகின்றனர். மேலும், அனுராதபுர வைத்தியசாலையின் 'மித்துறு பியச' எனும் அறையானது ரஜரட்ட பிரஜா கேந்திர மையத்தினால் பெண்களுக்கென முகாமைத்துவம் செய்யப்படுகின்றது.

[54] மத்தியஸ்த சபை உத்தியோகத்தருடனான நேர்காணல், பிரதேச செயலகம், அநுராதபுரம்

[55] அக்கறைதாரர்களுடன் பங்குதாரர்கள் கலந்துரையாடல்கள், அநுராதபுரம் மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர் நேர்காணல், அநுராதபுரம்

[56] மத்தியஸ்த சபை உத்தியோகத்தருடனான நேர்காணல், பிரதேச செயலகம், அநுராதபுரமட; மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர் நேர்காணல், அநுராதபுரம்.

[57] மத்தியஸ்த சபை உத்தியோகத்தருடனான நேர்காணல

[58] சேவை வழங்குநர்களுடன் இலக்குக் குழு கலந்துரையாடல்கள், அநுராதபுரம்.

[59] சட்ட உதவி உத்தியோகத்தருடனான கலந்துரையாடல், சட்ட உதவி ஆணைக்குழு, கெகிராவ

[60] சட்ட உதவி உத்தியோகத்தருடனான கலந்துரையாடல், சட்ட உதவி ஆணைக்குழு, கெகிராவ

[61] சட்ட உதவி உத்தியோகத்தருடனான கலந்துரையாடல், சட்ட உதவி ஆணைக்குழு, கெகிராவ

[62] சேவை வழங்குநர்களுடன் இலக்குக் குழு் கலந்துரையாடல்கள், அநுராதபுரம்

### 4.2.2. மட்டக்களப்பு

பொலிஸ் நிலையங்களின் குற்றப்பிரிவுகளில் போதுமான உத்தியோகத்தர்கள் இல்லையென்பதுடன் பெண் உத்தியோகத்தர்களும் இல்லை என பெண்கள் முறையிடுகின்றனர்.[63] காத்தான்குடி பொலிஸ் நிலையத்தில், மூன்று பெண் உத்தியோகத்தர்கள் உள்ளனர். என்றாலும், அங்கு இரு மொழிப்புலமை மற்றும் டிஜிட்டல் பாதுகாப்பு அறிவுடனான உத்தியோகத்தர்களுக்கு பற்றாக்குறை நிலவுகின்றது.[64] மேலும், அங்கு தொழில்நுட்ப அடிப்படையிலான பாலியல் மற்றும் பால்நிலை வன்முறைகளுடன் தொடர்புடைய டிஜிட்டல் பாதுகாப்பு உதவிகளும் வழங்கப்படுவதில்லை. அதன் விளைவாக, அத்தகைய சம்பவங்கள் மேலதிக விசாரணைகளுக்காக மஹா ஓயாவிலுள்ள இணைய வழி குற்றவியல் பிரிவுக்கு அல்லது கொழும்பிலுள்ள குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்கு அனுப்பப்படுகின்றன. ஆனால் அவை மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து வெகு தொலைவில் காணப்படுவதுடன், அங்கு உத்தியோத்தர்களும் முதன்மையாக ஆங்கிலத்திலேயே உரையாற்றுகின்றனர்.[65]

அங்கு தொழில்நுட்ப அடிப்படையிலான பாலியல் மற்றும் பால்நிலை வன்முறைகள் குறித்த பயிற்சிகளும் வழங்கப்படுவதில்லை என பொலிசிடமிருந்து சேவைகளை அணுகிய பெண்களின் அனுபவங்களிலிருந்து வெளிப்படுத்தப்பட்டுள்ளது.[66] உதாரணமாக, பொலிஸ் உத்தியோகத்தர்கள் தம்மை நாடுகின்ற வன்முறையிலிருந்து தப்பிப் பிழைத்தோர் மீது உடனடியாக குற்றம் சுமத்துகின்றனர். ஒரு பொலிஸ் உத்தியோகத்தர்

> "நீ இன்னமும் இளமையாகத் தான் இருக்கின்றாய் தனியாக என்ன செய்யப்போகின்றாய்? நான் வேண்டுமென்றால் உன்னைத் திருமணம் செய்துக்கொள்ளட்டுமா?"

எனக்கேட்டு பொலிஸ் நிலையத்தில் தொந்தரவு செய்ததாக பெண்ணொருவர் கூறினார்.[67] மற்றொரு பெண் தான் பொலிஸ் நிலையத்தில் முறையிட்டபொழுது, மகளிர் மற்றும் சிறுவர் பிரிவிலிருந்து தனக்கு எந்தவொரு உதவியும் கிடைக்கப்பெறவில்லையென்று கூறினார்.[68]

தொழில்நுட்ப அடிப்படையிலான பாலியல் மற்றும் பால்நிலை வன்முறைகளுக்கு உள்ளாக்கப்படுவதுடன் வெட்கம் மற்றும் அச்சம் காரணமாக, முஸ்லிம் பெண்கள் உதவிக்காக காதிமார்களை அணுகுகின்றனர். எனினும், அவர்களுக்குத் தேவையான வழிகாட்டல்களோ அல்லது உதவிகளோ அங்கு வழங்கப்படுவதில்லை என்பதுடன், அதற்குப்பதிலாக அவர்களை தொழில்நுட்ப அடிப்படையிலான பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறைகளிற்கு உள்ளாக்கிய அவர்களது முன்னாள் கணவர்களுடன் இணக்கமாக செல்லுமாறு கேட்கப்படுகின்றனர்.[69] ரிஸானா, காதி நீதிமன்றில் முறையிட்டபொழுது, அவர் வெறுமனே

> "இது எமது பொறுப்பல்ல"

என்று கூறியதுடன், ரிஸானாவை அவரது பிரச்சினையைத் தீர்க்க உதவும் வேறு நிறுவனங்களிற்கு வழிப்படுத்தவுமில்லை.[70] தன்னுடைய முன்னாள் கணவரினால் தொலைபேசியில் மேற்கொள்ளப்படுகின்ற அச்சுறுத்தல்கள் குறித்த பொலிசில் முறையிட முயன்ற மற்றொரு பெண்ணான, அஸ்மா, காதி நீதிமன்றுக்கு செல்லுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார்.[71] அவர் மீண்டும் மகளிர் மற்றும் சிறுவர் பிரிவில் முறையிட்டபொழுது, இணைய வழி குற்றப் பிரிவுக்கு அனுப்பப்பட்டுள்ளார்; அதன் பின்னர், பொறுப்பதிகாரி அவரை மீண்டும் மகளிர் மற்றும் சிறுவர் பிரிவிற்கு அனுப்பியுள்ளார்.[72] எனவே, பெண்கள் சேவைகளை பெற்றுக்கொள்ள முனையும் போது அவர்களின் பால்நிலை மற்றும் மத அடையாளங்கள் எவ்வாறு குறுக்கிடுகின்றன என்பதையும், அவர்கள் எவ்வாறு அநியாயமாக பாதிக்கப்படுகின்றனர் என்பதையும் இது சிறப்பாக பிரதிபலிக்கின்றது.

[63] அஸ்மாவுடனான நேர்காணல், TFSGBV இனால் பாதிக்கப்பட்ட பெண், மட்டக்களப்பு மாவட்டம

[64] பெண் பொலிஸ் சார்ஜண்டுடான நேர்காணல், காத்தான்குடி பொலிஸ் நிலையம், மட்டக்களப்பு மாவட்டம்

[65] அரச சேவைவழங்குநர்கள் ஈடுபட்டுள்ள அறிக்கை குறித்த இலக்குக் குழு கலந்துரையாடல்கள், மட்டக்களப்பு மாவட்டம்

[66] பெண் பொலிஸ் சார்ஜண்டுடான நேர்காணல், காத்தான்குடி பொலிஸ் நிலையம், மட்டக்களப்பு மாவட்டம்

[67] ப(க)ரா உடனான நேர்காணல், TFSGBV இனால் பாதிக்கப்பட்ட பெண், மட்டக்களப்பு மாவட்டம்

[68] ரிஸானா உடனான நேர்காணல், TFSGBV இனால் பாதிக்கப்பட்ட பெண், மட்டக்களப்பு மாவட்டம்

[69] ப(க)ரா உடனான நேர்காணல், TFSGBV இனால் பாதிக்கப்பட்ட பெண், மட்டக்களப்பு மாவட்டம்

[70] ரிஸானா உடனான நேர்காணல், TFSGBV இனால் பாதிக்கப்பட்ட பெண், மட்டக்களப்பு மாவட்டம்

[71] அஸ்மா உடனான நேர்காணல், TFSGBV இனால் பாதிக்கப்பட்ட பெண், மட்டக்களப்பு மாவட்டம்

[72] அஸ்மா உடனான நேர்காணல், TFSGBV இனால் பாதிக்கப்பட்ட பெண், மட்டக்களப்பு மாவட்டம்

பிரதேச செயலகத்தில், ஒரு சமூக உளவளத்துணை உத்தியோகத்தர், ஒரு பிரதேச சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர், ஒரு மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர், ஒரு பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர், மற்றும் சிறுவர் மற்றும் மகளிர் பிரிவுக்கான ஒரு உத்தியோகத்தர் உள்ளடங்கலாக பணியாளர்கள் காணப்படுகின்றனர். அங்கு ஒரு உத்தியோகத்தருக்கான பற்றாக்குறை நிலவுகின்றது.[73] மேலும், பெண்களுக்காக இலவச சேவைகளை வழங்கக்கூடிய சட்டத்தரணிகளும் காணப்படுவதில்லை.[74] அத்துடன் தொடர்புடைய அமைச்சுகள் மற்றும் “ஹேஸ்டாக் ஜெனரேசன்” (Hashtag Generation) போன்ற நிறுவனங்களினால் பயிற்சிகள் வழங்கப்படுகின்ற போதிலும், தொழிநுட்ப அடிப்படையிலான பாலியல் மற்றும் பால்நிலை வன்முறைச் சம்பவங்களைக் கையாளும் விதத்தில் விசேட நிபுணத்துவம் வாய்ந்த உத்தியோகத்தர்கள் இல்லாமை கவனத்திற்கொள்ளத்தக்க ஒரு பற்றாக்குறையாக காணப்படுகின்றது.[75] மேலும், நிதிக் கட்டுப்பாடுகள் காரணமாகவும் பிரதேச செயலகங்களுக்கு தமது உத்தியோகத்தர்களுக்கு தேவையான பயிற்சிகளை வழங்க முடியாதுள்ளது.[76] சேவைகளும் வாரநாட்களின் அலுவலக நேரங்களில் மாத்திரமே வழங்கப்படுகின்றன.[77] வார இறுதிகளில் இடம்பெறுகின்ற இத்தகைய சம்பவங்கள் குறித்து தொலைபேசி வாயிலாக முறையிடப்படுகின்றபோது, தொடர்புடைய நிறுவனங்களுக்கே செல்லுமாறு அறிவுறுத்தப்படுகின்றன.[78]

பொது வைத்தியசாலைகளும் உளவள உதவிகளையும் வழிகாட்டல் உதவிகளையும் வழங்குகின்றன.[79] பால்நிலை அடிப்படையிலான வன்முறை தடுப்புப் பிரிவில் நிரந்தர உத்தியோகத்தர்கள் மற்றும் வைத்தியருக்கான பற்றாக்குறை நிலவுவதால், அவர்களது சேவையும் வார நாட்களின் அலுவலக நேரங்களுடன் மட்டும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன. தற்போது, அங்கு தொழிநுட்ப அடிப்படையிலான பாலியல் மற்றும் பால்நிலை வன்முறைச் சம்பவங்களில் உதவுவதற்கு ஒரு உளவள ஆலோசகர், ஒரு மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர், ஒரு மனநல நிபுணர் மற்றும் மூன்று தாதி உத்தியோகத்தர்கள் (ஒரு ஆண் மற்றும் இரு பெண்கள்) ஆகியோர் காணப்படுகின்றனர்.[80] அங்கு ஒரு பெண் மருத்துவ உத்தியோகத்தர் மற்றும் இரு பெண் தாதி உத்தியோகத்தர்களுக்கான பற்றாக்குறை நிலவுகின்றது.[81] சுகாதார அமைச்சு மற்றும் “மித்துறு பியச” அலகு ஊடாக பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.[82] உள்ளூர் சமூக மட்ட அமைப்பான ஆய்விற்கும் மேம்பாட்டிற்குமான இஸ்லாமிய மகளிர் அமைப்பு (IWARE), குறிப்பாக உளவள ஆலோசனை உதவி வடிவில், உதவிகளை வழங்குகின்றது.

## 4.2.3. காலி

பொலிஸ் நிலையங்களில் பணியாளர் பற்றாக்குறை இருப்பதாக இவ்வாய்வில் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. எனவே, தற்போதிருக்கின்ற உத்தியோகத்தர்களுக்குப் புதிய பணிகள் ஒதுக்கப்படுகின்றன அல்லது அவர்கள் திடீரென இடமாற்றப்படுகின்றனர். இதனால், சேவை வழங்கலின் வினைத்திறன் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் குறித்த ஆய்வில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.[83] மேலும், இங்கு பெண் உத்தியோகத்தர்களுக்கும் பற்றாக்குறை நிலவுகின்றது.[84] ஒரு பெண் தான் பொலிசாரை அணுகியபோது அங்கு பெண் பொலிஸ் உத்தியோகத்தர்கள் யாருமில்லாதிருந்தமை தனக்கு அசௌகரியத்தை ஏற்படுத்தியதுடன், பொலிசாரும் அவருடைய சூழ்நிலையை நிவர்த்திக்கும் பொருத்தமான அடுத்தகட்ட நடவடிக்கைகள் குறித்து நிச்சயமற்றிருந்தனர் எனக் குறிப்பிடுகின்றார்.[85] அத்துடன் அங்கு டிஜிட்டல் பாதுகாப்பு நிபுணத்துவத்துடனான பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கும் பற்றாக்குறை நிலவுகின்றது.[86] அதன் விளைவாக, ஒரு பெண் பொலிஸ் உத்தியோகத்தரின் கூற்றுப்பிரகாரம்,

[73] மட்டக்களப்பு மாவட்டத்தில், காத்தான்குடி பிரதேச செயலகத்தின் உளவள ஆலோசனை உதவியாளருடனான நேர்காணல்

[74] மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தருடனான நேர்காணல், காத்தான்குடி பிரதேச செயலகம், மட்டக்களப்பு மாவட்டம்

[75] உளவள ஆலோசனை உதவியாளருடனான நேர்காணல், காத்தான்குடி பிரதேச செயலகம், மட்டக்களப்பு மாவட்டம்

[76] மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தருடனான நேர்காணல், காத்தான்குடி பிரதேச செயலகம், மட்டக்களப்பு மாவட்டம்

[77] மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தருடனான நேர்காணல், காத்தான்குடி பிரதேச செயலகம், மட்டக்களப்பு மாவட்டம

[78] மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தருடனான நேர்காணல், காத்தான்குடி பிரதேச செயலகம், மட்டக்களப்பு மாவட்டம்

[79] மனநல வைத்தியருடனான நேர்காணல், காத்தான்குடி பொது வைத்தியசாலை, மட்டக்களப்பு மாவட்டம்

[80] மனநல வைத்தியருடனான நேர்காணல், காத்தான்குடி பொது வைத்தியசாலை, மட்டக்களப்பு மாவட்டம

[81] மனநல வைத்தியருடனான நேர்காணல், காத்தான்குடி பொது வைத்தியசாலை, மட்டக்களப்பு மாவட்டம்

[82] மனநல வைத்தியருடனான நேர்காணல், காத்தான்குடி பொது வைத்தியசாலை, மட்டக்களப்பு மாவட்டம்

[83] சேவை வழங்குநர்களுடன் குவிமைய குழுக் கலந்துரையாடல்கள், காலி மாவட்டம்

[84] பெண் பொலிஸ் பொறுப்பதிகாரியுடனான நேர்காணல், மகளிர் மற்றும் சிறுவர் பணியகம், காலி மாவட்டம்

[85] தருஷி உடனான நேர்காணல், வுகுளுபுடீஏ இனால் பாதிக்கப்பட்ட பெண், காலி மாவட்டம்

இணையத்திலுள்ள படங்களை நீக்குதல் போன்ற டிஜிட்டல் பாதுகாப்பு உதவி தேவைப்படும் முறைப்பாடுகளில், அவ்விடயங்கள் இலங்கை கணினி அவசர தயார்நிலைக் குழுவிற்கு (SLCERT) ஆற்றுப்படுத்தப்படுகின்றன. மேலும், உளவள ஆலோசனைகளும் பொலிஸ் நிலையங்களில் குறிப்பிட்ட காலப்பகுதியில் மாத்திரமே கிடைக்கப்பெறுகின்றன. உளவள ஆலோசனைகள் பொலிஸ் நிலையத்தில் ஒவ்வொரு புதன்கிழமைகளில் கட்டணமின்றி தன்னார்வமாக வழங்குகின்ற மனநல நிபுணரினால் வழங்கப்பெறுகின்றது.[87] இங்கு முழுநேர அல்லது பகுதிநேர உளவள ஆலோசகரையேனும் ஆட்சேர்க்க நிதி இல்லாதுள்ளது. பொலிசாரும் அத்தகைய பிணக்குகளை உளவள உதவிக்கான கிராமிய பெண்கள் முன்னணிக்கு வழிப்படுத்துகின்றனர்.[88] மேலும், தமிழ் மொழியறிவுடைய பொலிஸ் உத்தியோகத்தர்களின் பற்றாக்குறை, மொழிபெயர்ப்பாளர்கள் இன்மை, மற்றும் தொழில்நுட்ப அடிப்படையிலான பாலியல் மற்றும் பால்நிலை வன்முறைகள் உள்ளடங்கலாக, பால்நிலை அடிப்படையிலான வன்முறைகள் தொடர்பாக போதிய பயிற்சியின்மை போன்றன இவ்வாறு அடையாளப்படுத்தப்பட்ட இன்னும் சில பிரச்சினைகளாகும்.[89]

பிரதேச செயலகத்தில், பெண்கள், மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர்களை அணுகி தமது பிரச்சினைகளை முன்வைக்கக்கூடியதாக இருந்தாலும், அங்கும் தமிழ் பேசும் உத்தியோகத்தர்களுக்கு பற்றாக்குறை காணப்படுகின்றது.[90] இது குறித்து இடம்பெற்ற கலந்துரையாடல்களில் தொழிநுட்ப அடிப்படையிலான பாலியல் மற்றும் பால்நிலை வன்முறைகளுக்கு எவ்வாறு தீர்வு காண்பது என்பது தொடர்பாக அவர்களுக்கு பயிற்சிகள் தேவைப்படுவதாகவும், குறித்த பயிற்சிகளை பெற்றுக்கொள்வதற்கு தங்களது சொந்த நிதிகளில் தங்கியிருக்கத் தேவையில்லை என்றும் வெளிக்கொணரப்பட்டது.[91]

1938 மற்றும் 109 துரித அழைப்புச் சேவைகளைப் பொறுத்தமட்டில், அவை கோட்பாட்டு ரீதியில் கிடைக்கப்பெறுவதாகக் காணப்பட்டாலும், நடைமுறையில் அவசர உதவிகளுக்கான சேவை வழங்கல்கள் போதுமானதாகக் காணப்படவில்லை.[92] துரித அழைப்புச் சேவைக்கு பதிலளிப்பவர்களுக்கு தொழில்நுட்ப அடிப்படையிலான பாலியல் மற்றும் பால்நிலை வன்முறைச் சம்பவங்களுக்கு பதிலளிப்பது தொடர்பாக போதிய பயிற்சி வழங்கப்படவில்லை.[93]

தொழில்நுட்ப அடிப்படையிலான பாலியல் மற்றும் பால்நிலை வன்முறைகளினால் பாதிக்கப்பட்டப் பெண்கள் கிராமிய பெண்கள் முன்னணி போன்ற அரச சார்பற்ற நிறுவனங்களை நாடுகின்றனர். ஏனெனில், அங்கு தங்களது தனிப்பட்ட விடயங்கள் மற்றும் தனியுரிமைகளைப் பேணியவாறு ஒரு தனி அறையில் அமைதியான சூழலில் தங்களது உளவள ஆலோசனைகளைப் பெறுவதற்கு போதிய வசதிகள் உள்ளன.[94] அத்துடன் அங்கு மனிதாபிமான உதவிகளும் சட்ட ஆலோசனைகளும் வழங்கப்படுகின்றன.[95] இத்தகைய நிறுவனங்களின் உத்தியோகத்தர்கள் பொலிஸ் நிலையம் போன்ற சேவை வழங்கும் நிறுவனங்களுக்கு பெண்களுடன் துணையாக செல்கின்றனர்.[96] அவற்றில் பணியாற்றும் உத்தியோகத்தர்களுக்கு இணையவழி வன்முறைகள் உள்ளடங்கலான வேறு பயிற்சிகளும் வழங்கப்படுகின்றன.[97] தொழில்நுட்ப அடிப்படையிலான பாலியல் மற்றும் பால்நிலை வன்முறைகள் தொடர்பில் பதிலளிப்பதற்கு பெண்களை பயிற்றுவித்து அவர்கள் மூலமாக வழங்கப்படுகின்ற 24/7 கிடைக்கக்கூடிய துரித அழைப்புச் சேவைகளும் காணப்படுகின்றன.[98] எனினும் இது தமிழ் மொழியில் கிடைக்கப்பெறுவதில்லை என்பதுடன் மொழிபெயர்ப்பாளரது உதவி அத்தியாவசியமானது.[99] அந்நிறுவனத்தில் ஒரேயொரு தமிழ் பேசும் பணியாளர் மாத்திரமே காணப்படுவதுடன் வினைத்திறனான சேவை வழங்கலிற்கு அதற்கு பல தமிழ் பேசும் உத்தியோகத்தர்கள் தேவைப்படுகின்றனர்.[100] மேலும், குறித்த நிறுவனத்தில் பாதுகாப்பு இல்லங்கள் இல்லை என்றும் அத்தகைய உதவிக்காக வேறு நிறுவனங்களில் தங்கியிருக்க வேண்டியுள்ளதாகவும்

---

86 பெண் பொலிஸ் பொறுப்பதிகாரியுடனான நேர்காணல், மகளிர் மற்றும் சிறுவர் பணியகம், காலி மாவட்டம்

87 பெண் பொலிஸ் பொறுப்பதிகாரியுடனான நேர்காணல், மகளிர் மற்றும் சிறுவர் பணியகம், காலி மாவட்டம்

88 பெண் பொலிஸ் பொறுப்பதிகாரியுடனான நேர்காணல், மகளிர் மற்றும் சிறுவர் பணியகம், காலி மாவட்டம்

89 பெண் பொலிஸ் பொறுப்பதிகாரியுடனான நேர்காணல், மகளிர் மற்றும் சிறுவர் பணியகம், காலி மாவட்டம்

90 மகளி அபிவிருத்தி உத்தியோகத்தருடனான நேர்காணல், காலி மாவட்டம்

91 சேவை வழங்குநர்களுடன் இலக்குக் குழு கலந்துரையாடல்கள், காலி மாவட்டம்

92 சேவை வழங்குநர்களுடன் இலக்குக் குழு கலந்துரையாடல்கள், காலி மாவட்டம்

93 சேவை வழங்குநர்களுடன் இலக்குக் குழு கலந்துரையாடல்கள், காலி மாவட்டம்

94 தருஷி உடனான நேர்காணல், TFSGBV இனால் பாதிக்கப்பட்ட பெண், காலி மாவட்டம்

95 ஒருங்கிணைப்பு மற்றும் உளவள ஆலோசனை உத்தியோகத்தருடனான நேர்காணல், கிராமிய மகளிர் முன்னணி, காலி மாவட்டம்

96 தருஷி உடனான நேர்காணல், TFSGBV இனால் பாதிக்கப்பட்ட பெண், காலி மாவட்டம்

97 ஒருங்கிணைப்பு மற்றும் உளவள ஆலோசனை உத்தியோகத்தருடனான நேர்காணல், கிராமிய மகளிர் முன்னணி, காலி மாவட்டம்

98 ஒருங்கிணைப்பு மற்றும் உளவள ஆலோசனை உத்தியோகத்தருடனான நேர்காணல், கிராமிய மகளிர் முன்னணி, காலி மாவட்டம

99 ஒருங்கிணைப்பு மற்றும் உளவள ஆலோசனை உத்தியோகத்தருடனான நேர்காணல், கிராமிய மகளிர் முன்னணி , காலி மாவட்டம்

ஒரு உத்தியோகத்தர் குறிப்பிட்டார்.

மேலும், மித்துறு பியசவிடமிருந்து வாரநாட்களில் காலை 07.00 மணி முதல் மாலை 04.00 மணிவரையிலும், வார இறுதி நாட்களில் காலை 07.00 மணி முதல் பிற்பகல் 01.00 மணிவரையிலும் பெண்களுக்கு உதவிகளை எதிர்பார்க்கலாம்.[101] 'மித்துறு பியசவில்' இரு பணியாளர்கள் மட்டுமே காணப்பட்டாலும், அவர்கள் கிராமியப் பெண்கள் முன்னணி, சட்ட உதவி நிலையம், மற்றும் பொலிஸ் போன்ற நிறுவனங்களுக்கு வழிப்படுத்துகின்றனர். அங்கு பெண்களை பொருத்தமான உத்தியோகத்தர்கள் அல்லது நிறுவனங்களுடன் ஒருங்கிணைப்புச் செய்தும் அவர்களை உரிய நிறுவனங்களுக்கு வழிப்படுத்துவதனூடாகவும் அவர்களுக்கான சேவைகள் வழங்கப்படுகின்றன.[102] எனினும், இங்கு சேவையாற்றும் உத்தியோகத்தர்களுக்கும் தமிழ் மொழியறிவு இல்லை என்பதுடன், பெரும்பாலான பிரச்சினைகள் பெண்களின் உணர்வுகளுடன் சம்பந்தப்படுவதால், மித்துறு பியச மொழிபெயர்ப்புகளுக்காக வெளி நிறுவனங்கள் அல்லது நபர்களின் உதவிகளை எதிர்பார்ப்பதில்லை.[103] இது சேவைகளை அணுகும் தமிழ் பேசும் பெண்களுக்கான ஒரு தடையாகக் காணப்படுகின்றது. மித்துறு பியசவிற்கு உள ரீதியான அதிர்ச்சிகளால் பாதிக்கப்பட்டோருக்கான ஆலோசனை மற்றும் பராமரிப்புத் துறையில் பயிற்றப்பெற்ற மனநல நிபுணர்கள் மற்றும் வைத்தியர்கள் தேவைப்படுகின்றனர். இப்பயிற்சிகள் பாதிப்பட்டவர்களது எதிர்வினைகளைப் புரிந்துகொள்ளவும், மீண்டும் உள ரீதியான அதிர்ச்சிகளால் பாதிக்கப்படுவதைத் தவிர்க்கவும் தொழில்நுட்ப அடிப்படையிலான பாலியல் மற்றும் பால்நிலை வன்முறைகள் மூலம் ஏற்படுகின்ற மனநிலைகளை அடையாளங்காணவும் அவர்களுக்கு உதவக்கூடும்.[104] அத்துடன், அழைப்பு மையத்தில் மனநோய்களை இனங்காணவும் அதற்கான மருந்துகளை பரிந்துரைப்பதற்கும் ஒரு வைத்தியர் இல்லை என ஒரு உத்தியோகத்தர் விசேடமாக குறிப்பிட்டிருந்தார். குறிப்பாக, மித்துறு பியச தொழில்நுட்ப அடிப்படையிலான பாலியல் மற்றும் பால்நிலை வன்முறைகள் குறித்து செவிமடுக்கும் உத்தியோகத்தர்களுக்கு மாதாந்த மனநலப் பரிசோதனைகளை நடாத்துகின்றது.[105]

பெண்கள் சேவைகளைப் பெற்றுக்கொள்ளும் நோக்கில் அணுகும் நிறுவனங்களிலிருந்து அவர்களுக்குத் தேவையான தகவல்களும் பயனுறுதிவாய்ந்த வழிப்படுத்தல் ஒத்துழைப்பும் போதியளவு கிடைக்காமையினால் பெண்கள் அதிகம் பாதிக்கப்படுகின்றனர். உதாரணமாக, ஒரு பெண் தன்னுடைய முகநூல் ஊடுருவியிருப்பதை, அதாவது 'ஹெக்' செய்யப்பட்டிருப்பதை முறைப்பாடு செய்வதற்காக தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவை அணுகியிருந்தார். அங்கு இலங்கை கணினி அவசர தயார்நிலைக் குழுவை அணுகி முறைப்பாடு செய்யுமாறு தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவிலுள்ள உத்தியோகத்தர்கள் பரிந்துரைத்திருந்த போதிலும், அதனை அவர்கள் முறையாக நெறிப்படுத்த தவறியிருந்தனர்.[106] அத்துடன் அவர் உதவியை எதிர்பார்த்தபோது தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவில் பெண் உத்தியோகத்தர்கள் காணப்படவில்லை.[107] எனவே, தொழில்நுட்ப அடிப்படையிலான பாலியல் மற்றும் பால்நிலை வன்முறைகள் சம்பந்தமான நிகழ்வுகளை முறையிடும்போது அரச நிறுவனங்களில் தாமாக முன்வந்து ஆர்வத்துடனும் செயலூக்கத்துடனும் உதவும் உத்தியோகத்தர்கள் இருக்க வேண்டுமென இச்சம்பவம் சுட்டிக்காட்டுகின்றது.

---

[100] ஒருங்கிணைப்பு மற்றும் உளவள ஆலோசனை உத்தியோகத்தருடனான நேர்காணல், கிராமிய மகளிர் முன்னணி, காலி மாவட்டம

[101] சுகாதார வைத்திய அதிகாரியுடனான நேர்காணல், மித்துறு பியஸ, காலி மாவட்டம்

[102] சுகாதார வைத்திய அதிகாரியுடனான நேர்காணல், மித்துறு பியஸ, காலி மாவட்டம்

[103] சுகாதார வைத்திய அதிகாரியுடனான நேர்காணல், மித்துறு பியஸ, காலி மாவட்டம்

[104] சுகாதார வைத்திய அதிகாரியுடனான நேர்காணல், மித்துறு பியஸ, காலி மாவட்டம்

[105] சுகாதார வைத்திய அதிகாரியுடனான நேர்காணல், மித்துறு பியஸ, காலி மாவட்டம்

[106] சந்துனியுடனான நேர்காணல், TFSGBV இனால் பாதிக்கப்பட்ட பெண்களை அடையாளங்காணும் பெண், காலி மாவட்டம்

[107] சந்துனியுடனான நேர்காணல், TFSGBV இனால் பாதிக்கப்பட்ட பெண்களை அடையாளங்காணும் பெண், காலி மாவட்டம்

## 4.2.4. கிளிநொச்சி

கிளிநொச்சியில் டிஜிட்டல் பாதுகாப்பு தொடர்பாக துறைசார் வல்லுநர்கள் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே உள்ளனர். இதனால், தங்களது ஒப்புதலின்றி இணையத்தில் பதிவேற்றப்பட்ட புகைப்படங்களை நீக்குவதற்கு யாழ்ப்பாண பொலிசின் இணையவழி குற்றப் பிரிவின் உதவியைப் பெற பாதிக்கப்பட்டப் பெண்கள் யாழ்ப்பாணத்திற்குப் பயணிக்க வேண்டியுள்ளது.[108]

> "நீண்ட காலமாக பல்வேறு இடங்களுக்கு நான் சென்றேன். சமூக ஊடகத்திலிருந்து புகைப்படங்களை நீக்குவதற்கு கிளிநொச்சியில் எனக்கு எந்த உதவியும் கிடைக்கவில்லை. யாழ்ப்பாணத்திற்கு போகுமாறு கூறினார்கள். யாழ்ப்பாணத்திலுள்ள உத்தியோகத்தர்கள் என்னுடைய புகைப்படங்களை நீக்குவதற்கு உதவியதுடன் என்னுடைய பாதுகாப்பினையும் உறுதிப்படுத்தினர்"

எனப் பாதிக்கப்பட்ட பெண்ணொருவர் கூறினார்.[109] இவ்வாறாக, கிளிநொச்சியில் தொழிநுட்ப அடிப்படையிலான பாலியல் மற்றும் பால்நிலை வன்முறைச் சம்பவங்களை கையாளுவதற்கான டிஜிட்டல் பாதுகாப்பு விசாரணைத் திறனில் ஒரு பாரிய இடைவெளியுடன் காணப்படுகின்றது.[110]

கிளிநொச்சி மக்கள் அடிப்படையில் தமிழ் பேசுபவர்களாக காணப்படுகின்ற போதிலும், கிளிநொச்சியிலுள்ள பெரும்பாலான பொலிஸ் உத்தியோகத்தர்கள் சிங்களம் பேசுபவர்களாகக் காணப்படுகின்றனர். தமிழ் பேசும் உத்தியோகத்தர்கள் ஊடாக மொழிபெயர்ப்புகள் வழங்கப்பட்டாலும், தகவல் சரியாக கொண்டுசெல்லப்பட்டதா என்பதில் நிச்சயமில்லாமையினால் பெண்கள் அவற்றை நம்புவதில்லை.[111]

> "நான் பொலிஸ் நிலையத்திற்குச் சென்றபோது ஒரேயொரு பெண் உத்தியோகத்தர் மாத்திரமே இருந்தார். அவரால் நான் கதைத்த தமிழ் மொழியை புரிந்துகொள்ளமுடியவில்லை"

என பாதிக்கப்பட்டப் பெண்ணொருவர் கூறினார். [112] (112) அதன்விளைவாக, தன்னுடைய சில உணர்வுபூர்வமான தகவல்களைப் பகிர்ந்துகொள்ளமுடியாத, ஒரு ஆண் உத்தியோகத்தரிடம் தன்னுடைய முறைப்பாட்டினை பதிவுசெய்தார்.

தொழிநுட்ப அடிப்படையிலான பாலியல் மற்றும் பால்நிலை வன்முறை விடயங்களில் உதவுவதற்காக அதிகமான பெண் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கான தேவை காணப்படுகின்றது.[113] தற்போது கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில், ஐந்து பெண் உத்தியோகத்தர்களும் ஒன்பது ஆண் உத்தியோகத்தர்கள் மட்டுமே காணப்படுகின்றனர். இரு பெண் உத்தியோகத்தர்கள் தமிழிலிருந்து சிங்களத்திற்கும் சிங்களத்திலிருந்து தமிழிற்கும் மொழிபெயர்ப்புகளை வழங்குவதாக ஒரு உத்தியோகத்தர் குறிப்பிட்டார். தொழிநுட்ப அடிப்படையிலான பாலியல் மற்றும் பால்நிலை வன்முறைச் சம்பவங்களுக்கென அர்ப்பணிக்கப்பட்ட பொலிஸ் துரித அழைப்புச் சேவையொன்று காணப்படாத போதிலும், 107 (தமிழுக்கு) மற்றும் 109 (சிங்களத்திற்கு) பொலிஸ் துரித அழைப்பிலக்கங்கள் மூலம் பாதிக்கப்பட்ட பெண்கள் 24 மணிநேரமும் எவ்வித கட்டணமுமின்றி தங்கள் முறைப்பாடுகளை மேற்கொள்ள முடியும்.[114] பொலிசாருக்கு தொழிநுட்ப அடிப்படையிலான பாலியல் மற்றும் பால்நிலை வன்முறைகளுடன் தொடர்புடைய விசேட பயிற்சிகள் எதுவும் வழங்கப்பட்டிருக்கவில்லை.[115]

பிரதேச செயலகத்தில், மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர்களினால் வழங்கப்படும் உளவள ஆலோசனைச் சேவைகள் இலவசமாக பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருந்த போதிலும், அவற்றை வாரநாட்களில் அலுவலக நேரங்களில்,

[108] பெண் பொலிஸ் அதிகாரியுடனான நேர்காணல், கிளிநொச்சி மாவட்டம்; 2025 இல், கணினி குற்ற விசாரணை உப பிரிவொன்று யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் தாபிக்கப்பட்டது: இலங்கை பொலிஸ், வட மாகாணத்திற்கான புதிய கணினி குற்ற விசாரணை உப-பிரிவு https://www.police.lk/?p=8218

[109] கமலா உடனான நேர்காணல், TFSGBV இனால் பாதிக்கப்பட்ட பெண், கிளிநொச்சி

[110] பெண் பொலிஸ் அதிகாரியுடனான நேர்காணல், கிளிநொச்சி மாவட்டம்

[111] கமலா உடனான நேர்காணல், TFSGBV இனால் பாதிக்கப்பட்ட பெண், கிளிநொச்சி மாவட்டம்; லக்ஷ்மி உடனான நேர்காணல், TFSGBV இனால் பாதிக்கப்பட்ட பெண், கிளிநொச்சி மாவட்டம்

[112] லக்ஷ்மி உடனான நேர்காணல், TFSGBV இனால் பாதிக்கப்பட்ட பெண், கிளிநொச்சி மாவட்டம்

[113] பெண் பொலிஸ் அதிகாரியுடனான நேர்காணல், கிளிநொச்சி மாவட்டம்

[114] பெண் பொலிஸ் அதிகாரியுடனான நேர்காணல், கிளிநொச்சி மாவட்டம்

[115] பெண் பொலிஸ் அதிகாரியுடனான நேர்காணல், கிளிநொச்சி மாவட்டம்

காலை 8.30 தொடக்கம் மாலை 4.30 வரையில் மாத்திரமே பெற்றுக்கொள்ள முடியும்.[116] மகளிர் அபிவிருத்தி உத்தியோத்தர்களிடமிருந்து உதவிகளைப் பெறுவதற்கென அர்ப்பணிக்கப்பட்ட துரித அழைப்புச் சேவைகள் ஏதுமில்லையென்பதுடன், பாதிக்கப்பட்டப் பெண்கள் பெரும்பாலும் மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர்களை அவர்களது பிரத்தியேக எண்களில் அலுவலக நேரத்திலேயே தொடர்புகொள்கின்றனர். மேலதிகமாக, கிளிநொச்சி மாவட்டத்தில் நான்கு பெண் மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மாத்திரமே பணியாற்றுவதுடன், பெற்றுக்கொண்ட அதிக முறைப்பாடுகளது எண்ணிக்கையுடன் ஒப்பிடுகையில் அவர்களது எண்ணிக்கை குறைவாகவே காணப்படுகின்றது. ஒரு மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர் குறிப்பிட்டவாறு, ஒவ்வொரு வாரமும் சராசரியாக ஆறு முறைப்பாடுகள் கிடைக்கின்றன.[117] மேலும், 2019 தொடக்கம் 2025 வரையான காலப்பகுதியில் அரசாங்க வெற்றிடங்கள் நிரப்பப்படவில்லையென ஒரு மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர் சுட்டிக்காட்டினார். மேலும் உளவள ஆலோசகர்களும் பளை மற்றும் கிளிநொச்சி நகரங்களில் மாத்திரமே காணப்படுகின்றனர். அப்பகுதியில் தமிழே பரவலான மொழியாகக் காணப்படுவதனால் அச்சேவைகளை தமிழ் மொழியில் மாத்திரமே அணுகக்கூடியதாகவுள்ளது.

மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு பிரதேச செயலகத்தில் மாதம் ஒருமுறை நடாத்தப்படும் பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறைகளுடன் தொடர்புடைய பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்கு அனுமதி அளிக்கப்படுகின்றது. பொலிஸ் உத்தியோகத்தர்கள், உளவியலாளர்கள், மற்றும் மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர் போன்ற பணியாளர்களது பங்கேற்புடன் பிரதேச செயலக அலுவலகம் இப்பயிற்சிகளை நடாத்துகின்றது. இவற்றுக்கு ‘வேர்ல்ட் விஷன் (World Vision), ‘சேவ் த சில்ட்ரன்’ (Save the Children) மற்றும் செஞ்சிலுவைச் சங்கம் போன்ற அமைப்புக்களினால் உதவியளிக்கப்படுகின்றன. எனினும், டிஜிட்டல் பாதுகாப்பு தொடர்பாக நிபுணத்துவம் வாய்ந்த உத்தியோகத்தர்களுக்கும், அவ்வாறே உள ரீதியான அதிர்ச்சிகளை புரிந்து அவற்றுக்கு உளவள ஆலோசனை மற்றும் வழிகாட்டல்களை வழங்கும் துறைசார் நிபுணர்களுக்கும் பற்றாக்குறை காணப்படுகின்றது. ஆதலால், இணையவழிக் குற்றங்கள் தொடர்பான வழக்குகளை மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் யாழ்ப்பாணத்திலுள்ள விசேட மையங்களுக்கு வழிப்படுத்துகின்றனர்.[118]

நான்கு கிராம உத்தியோகத்தர் பிரிவுகளை உள்ளடக்கிய வட்டகச்சிப் பகுதியில், ஒரே ஒரு மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர் மாத்திரம் பணியாற்றுகிறார். இதனால் மாதாந்தம் தாக்கலிடுகின்ற பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறைகள் தொடர்புடைய முறைப்பாடுகளை கையாளுவது மிகவும் சிரமம். அங்கு இன்னமும் இரண்டு உத்தியோகத்தர்களுக்கான பதவி நிரப்பப்படாது வெற்றிடமாக உள்ளது. கிராம உத்தியோகத்தர், முறைப்பாட்டின் அடிப்படையில், பாதிக்கப்பட்டப் பெண்களுக்கு ஆலோசனைகளை வழங்குவதுடன், பொலிஸ், நீதிமன்றங்கள் அல்லது மத்தியஸ்த சபைக்கு வழிப்படுத்துகிறார்.[119] கிராம உத்தியோகத்தர்களுக்கு தொழிநுட்ப அடிப்படையிலான பாலியல் மற்றும் பால்நிலை வன்முறைச் சம்பவங்களை கையாளுவதற்கான பயிற்சிகள் வழங்கப்படுவதில்லை.

மேலும், போதுமான நிதி ஒதுக்கீடுகள் இல்லாமையினால் தொழிநுட்ப அடிப்படையிலான பாலியல் மற்றும் பால்நிலை வன்முறைகளில் விசேட பயிற்சிகளை வழங்குவதும் பயிற்றப்பட்ட உத்தியோகத்தர்களை தக்கவைத்துக் கொள்வதும் பாரிய சவாலாக உள்ளது.[120] மனவழுத்தம், பணிச்சோர்வு மற்றும் அதீத இரக்கத்தின்பாலான மனச்சோர்வுகளுக்கு உள்ளாகும் சேவை வழங்குநர்களுக்கான உளவள ஆலோசனைகளோ அல்லது வேறு உதவி பொறிமுறைகளோ காணப்படுவதில்லை. அத்துடன், கிளிநொச்சியில் பரிந்துரைகளை மையப்படுத்திய முறைமையோ அல்லது சம்பவங்களை முகாமைத்துவம் செய்வதற்கான ஒரு முறைமையோ நடைமுறையில் இல்லை. அதன் பெறுபேறாக, பாதிக்கப்பட்டப் பெண்களுக்கு தமது அனுபவங்களை பொலிஸ் உத்தியோகத்தர்கள், மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர், அரசசார்பற்ற நிறுவனங்கள், மற்றும் சமுதாய அமைப்புக்களைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் ஆகியோரிடம் பல தடவைகள் மீண்டும் மீண்டும் கூற வேண்டி ஏற்படுவதால் அவர்கள் மீண்டும் மீண்டும் பாதிக்கப்படுகின்றனர்.[121]

116 மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தருடனான நேர்காணல், கரைச்சி பிரதேச செயலகம், கிளிநொச்சி மாவட்டம்; மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தருடனான நேர்காணல், கரைச்சி பிரதேச செயலகம், கிளிநொச்சி மாவட்டம்

117 மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தருடனான நேர்காணல், கரைச்சி பிரதேச செயலகம், கிளிநொச்சி மாவட்டம்

118 மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தருடனான நேர்காணல், கரைச்சி பிரதேச செயலகம், கிளிநொச்சி மாவட்டம்

119 கிராம உத்தியோகத்தருடனான நேர்காணல், வட்டக்கச்சி, கிளிநொச்சி மாவட்டம்

120 சேவை வழங்குநர்களுடனான இலக்குக் குழு் கலந்துரையாடல், கிளிநொச்சி

121 சேவை வழங்குநர்களுடனான இலக்குக் குழு கலந்துரையாடல், கிளிநொச்சி; அக்கறைதாரர்களுடனான இலக்குக் குழு கலந்துரையாடல், கிளிநொச்ச

## 4.2.5. புத்தளம்

பொலிஸ் நிலையங்களில் உத்தியோகத்தர்களுக்கான பற்றாக்குறை இருப்பதாக இவ்வாய்வில் கண்டறியப்பட்டுள்ளது.[122] உதாரணமாக, ஒரு பெண் பொலிஸ் தலைமைப் பரிசோதகர் தான் பணியாற்றும் பொலிஸ் நிலையத்தில் உளவள ஆலோசகர்கள் இல்லை என்பதனை சுட்டிக்காட்டியுள்ளார்.[123] அதன் காரணமாக பிரதேச செயலகத்திலுள்ள உளவள ஆலோசகரது உதவியை பொலிஸ் நிலையம் நாடவேண்டியுள்ளது.[124] அவர்கள் நன்னடத்தை உத்தியோகத்தர், சட்டத்தரணிகள் மற்றும் சட்ட உதவி நிலையங்களின் உதவிகளையும் நாடுகின்றனர்.[125] எனினும், வார இறுதி நாட்களில் இந்த உதவிகளை பெற்றுக்கொள்ள முடியாது.[126] மேலும், அங்கு பணியாற்றும் உத்தியோகத்தர்களுள் ஒரு உத்தியோகத்தருக்கு மாத்திரமே தமிழில் கதைக்க முடியும். எனவே, தமிழ் மொழியில் பரிச்சயமுடைய அதிகளவான பொலிஸ் உத்தியோகத்தர்கள் தேவைப்படுகின்றனர்.[127] நுரைச்சோலைப் பொலிஸ் நிலையத்தில், தமிழ் பேசும் உத்தியோகத்தர்கள் ஆறு பேர் உள்ளனர். இது போதுமானது. என்றாலும், அங்கு மூன்று பெண் உத்தியோகத்தர்கள் மட்டுமே காணப்படுவதுடன், மேலும் இரு பெண் உத்தியோகத்தர்களுக்கு வெற்றிடம் காணப்படுகின்றது.[128]

அத்துடன், சம்பவங்களை முறைப்பாடு செய்வதற்கு 107 துரித அழைப்பு மையத்தை பயன்படுத்தக்கூடியதாக இருந்தாலும், துரித அழைப்புகளை கையாளுகின்ற பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு, குறிப்பாக தொழில்நுட்ப அடிப்படையிலான பாலியல் மற்றும் பால்நிலை வன்முறைகளுக்கு எதிர்வினையாற்றும் விதத்தில் அவர்களுக்கு போதியளவு பயிற்சிகள் வழங்கப்படவில்லை.[129] மேலும், தொழிநுட்ப அடிப்படையிலான பாலியல் மற்றும் பால்நிலை வன்முறைகளைக் கையாண்டு உரிய தீர்வுகளை வழங்கும் உத்தியோகத்தர்களைத் தக்கவைக்கவும் அவர்களுக்குப் பயிற்சிகளை வழங்கவும் போதியளவு நிதிகள் ஒதுக்கப்படுவதுமில்லை. எனினும், கட்டான பொலிஸ் பயிற்சிக் கல்லூரியினால் வழங்கப்படும் பால்நிலை அடிப்படையிலான வன்முறை டிப்ளோமா போன்ற பயிற்சிகளை பெறுவதற்கான வாய்ப்புகள் காணப்படுகின்றன.[130] மேலும், தொழிநுட்ப அடிப்படையிலான பாலியல் மற்றும் பால்நிலை வன்முறை சார்ந்த முறைப்பாடுகள் கிடைக்கின்ற போது, அவை வாரியப்பொல இணையவழிக் குற்றப் பிரிவுக்கு ஆற்றுப்படுத்தப்படுகின்றன. அங்கே, போதுமான உதவிகள் கிடைக்கப்பெறாதவிடத்து, அவ்விடயம் கொழும்பிலுள்ள கணினி குற்றவியல் புலனாய்வுப் பிரிவுக்கு அனுப்பிவைக்கப்படுகின்றது.[131]

பிரதேச செயலகத்தில், உத்தியோகத்தர்களுக்கான பற்றாக்குறைகள் காணப்படுகின்றன.[132] முந்தல் பிரதேச செயலக அலுவலகத்தில், அங்கு ஒரு மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் முன்பிள்ளைப்பருவ அபிவிருத்தி உத்தியோகத்தர் காணப்படுகின்ற போதிலும், மேலும் நான்கு உத்தியோகத்தர்களுக்கான வெற்றிடம் காணப்படுகின்றது.[133] இங்கு உளவளத்துணை ஆலோசகர், சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர் மற்றும் நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவை உத்தியோகத்தர் போன்றவர்களுக்கான வெற்றிடங்கள் காணப்படுகின்றன.[134] யாழ் சமூக செயற்பாட்டு மையம் போன்ற அரசசார்பற்ற நிறுவனங்களினால் பயிற்சிகளும் வழங்கப்படுகின்றன.

மேலும், மத்தியஸ்த சபையில், 22 உறுப்பினர்கள் காணப்பட வேண்டும். என்றாலும், 15 பேர் மாத்திரமே உள்ளீர்க்கப்பட்டுள்ளனர்.[135] அவர்களில், 11 பேர் ஆண்களாகவும் நான்கு பேர் மாத்திரமே பெண்களாகவும் காணப்படுகின்றனர்.[136] நீதி அமைச்சு அவர்களுக்கு பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறைகள் போன்ற தலைப்புகளில் பயிற்சி வாய்ப்புக்களை வழங்கியுள்ளது.[137]

[122] பொறுப்பதிகாரியுடனான நேர்காணல், நுரைச்சோலை பொலிஸ் நிலையம், புத்தளம் மாவட்டம்.
[123] பெண் பிரதம பொறுப்பதிகாரியுடனான நேர்காணல், புத்தளம் மாவட்டம
[124] பெண் பிரதம பொறுப்பதிகாரியுடனான நேர்காணல், புத்தளம் மாவட்டம்
[125] பெண் பிரதம பொறுப்பதிகாரியுடனான நேர்காணல், புத்தளம் மாவட்டம்
[126] பெண் பிரதம பொறுப்பதிகாரியுடனான நேர்காணல், புத்தளம் மாவட்டம்
[127] பெண் பிரதம பொறுப்பதிகாரியுடனான நேர்காணல், புத்தளம் மாவட்டம
[128] பொறுப்பதிகாரியுடனான நேர்காணல், நுரைச்சோலை பொலிஸ் நிலையம், புத்தளம் மாவட்டம்
[129] பொறுப்பதிகாரியுடனான நேர்காணல், நுரைச்சோலை பொலிஸ் நிலையம், புத்தளம் மாவட்டம்
[130] பெண் பிரதம பொறுப்பதிகாரியுடனான நேர்காணல், புத்தளம் மாவட்டம்
[131] சேவை வழங்குநர்களுடனான இலக்குக் குழு கலந்துரையாடல், புத்தளம் மாவட்டம்
[132] மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தருடனான நேர்காணல், முந்தல் பிரதேச செயலகம், புத்தளம் மாவட்டம்
[133] மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தருடனான நேர்காணல், முந்தல் பிரதேச செயலகம், புத்தளம் மாவட்டம
[134] மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தருடனான நேர்காணல், முந்தல் பிரதேச செயலகம், புத்தளம் மாவட்டம
[135] மத்தியஸ்த சபை உறுப்பினருடனான நேர்காணல், கல்பிட்டிய, புத்தளம் மாவட்டம்
[136] மத்தியஸ்த சபை உறுப்பினருடனான நேர்காணல், கல்பிட்டிய, புத்தளம் மாவட்டம்
[137] மத்தியஸ்த் சபை உறுப்பினருடனான நேர்காணல், கல்பிட்டிய, புத்தளம் மாவட்டம

# 5. தொகுப்புரையும் பரிந்துரைகளும்

இந்த ஆய்வில் சேவை வழங்கலில் காணப்படுகின்ற பல இடைவெளிகள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. ஆய்வுக்குட்படுத்திய ஐந்து மாவட்டங்களிலும் சேவைகளைப் பெற்றுக்கொள்ள முயற்சிக்கும் போது போதுமானளவு தமிழ் பேசும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் மற்றும் பெண் பொலிஸ் உத்தியோகத்தர்கள் இல்லை என அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. ஒவ்வொரு புதன்கிழமைகளில் மனநல வைத்தியர் ஒருவரினால் இலவசமாக உளவள ஆலோசனைகள் பொலிஸ் நிலையத்திலேயே வழங்கப்படுகின்ற காலி மாவட்டம் தவிர்த்து, வேறு எங்கும் அமைந்துள்ள பொலிஸ் நிலையங்களில் உளவள ஆலோசகர்கள் காணப்படவில்லை. பொலிஸ் நிலையங்களில் பயிற்றப்பட்ட முழுநேர அல்லது பகுதிநேர உளவள ஆலோசகர்களை பணிக்கமர்த்துவதற்கான நிதி ஒதுக்கீடுகள் காணப்படவில்லை. அதன்விளைவாக, சேவை நாடிவரும் மக்களை பொலிஸ் உத்தியோகத்தர்கள் வேறு இடங்களுக்கு வழிப்படுத்துகின்றனர்.

மேலும், பொலிஸ் நிலையங்களிலும் தொழிநுட்ப அடிப்படையிலான பாலியல் மற்றும் பால்நிலை வன்முறை தொடர்பான முறைப்பாடுகளைத் தீர்ப்பதற்கு தேவைப்படும் டிஜிட்டல் பாதுகாப்பு நிபுணத்துவத்துடனான உத்தியோகத்தர்களுக்கு பற்றாக்குறை காணப்படுகின்றது. அதன் விளைவாக, பெண்கள் அத்தியாவசியத் தேவைகளுக்காக தொலைவிலுள்ள இணைய வழி குற்றப் பிரிவுகளை அணுக வேண்டியவர்களாகவுள்ளனர். உதாரணமாக, மட்டக்களப்பில் சேவை நாடி வரும் பெண்களுக்கு மஹா ஓயாவிலுள்ள இணைய வழி குற்றத்தடுப்பு பிரிவுக்கோ அல்லது கொழும்பிலுள்ள குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்கு செல்லுமாறு பரிந்துரைகள் வழங்கப்படுகின்றன. அதேபோன்று, கிளிநொச்சியில், பெண்கள் யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்திலுள்ள இணையவழி குற்றப் பிரிவுக்கு செல்ல வேண்டியவர்களாகவுள்ளனர். புத்தளத்தில், தொழில்நுட்ப அடிப்படையிலான பாலியல் மற்றும் பால்நிலை வன்முறை முறைப்பாடுகள் வாரியப்பொலவிலுள்ள இணையவழி குற்றப் பிரிவிற்கு அல்லது கொழும்பிலுள்ள கணினி குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்கோ ஆற்றுப்படுத்தப்படுகின்றன. காலியில், இலங்கை கணினி அவசர தயார்நிலைக் குழுவிற்கு பரிந்துரைகள் ஆற்றுப்படுத்தப்படுகின்றன. இதனால், தொழில்நுட்ப அடிப்படையிலான பாலியல் மற்றும் பால்நிலை வன்முறைகளினால் பாதிக்கப்பட்டப் பெண்கள் தொலைதூரத்திற்குப் பயணிப்பதனைத் தவிர்ப்பதற்காக நாட்டின் ஒவ்வொரு மாவட்டத்திலும் குறைந்தது ஒரு இணையவழி குற்றப் பிரிவு காணப்படுதல் வேண்டும். இது அவர்களது நெருக்கடிகளைத் தீர்ப்பதற்குத் தேவையான டிஜிட்டல் நிபுணத்துவத்தை பெற்றுக்கொள்ள இயலச்செய்யும்.

பிரதேச செயலகங்களில், மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சினால் வழங்கப்பட்ட பொதுவான துரித அழைப்பு இலக்கங்களை மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர்களை அணுக பயன்படுத்தலாம். எனினும், துரித அழைப்பிலிருந்து கிடைக்கும் பதில்கள் பொதுவாகவே மெத்தனமானதாக காணப்படுவதுடன் பெண்கள் பெரும்பாலும் மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர்களை சாத்தியமானவிடத்து அவர்களது சொந்த இலக்கங்களிலேயே அணுகுகின்றனர். அனைத்து மாவட்டங்களிலம், பிரதேச செயலக அலுவலகங்களில் உத்தியோகத்தர்களுக்கான குறைபாடு இருப்பது இனங்காணப்பட்டுள்ளது. உதாரணமாக, மட்டக்களப்பில், பொது நலன் உதவிகளை வழங்கக்கூடிய பிரதேச செயலகத்துடன் இணைந்த சட்டத்தரணியொருவர் இல்லை என இனங்காணப்பட்டுள்ளது. மேலும், புத்தளத்தில், உளவள ஆலோசகர், சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர், மற்றும் நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் உத்தியோகத்தர் போன்ற பதவிகளுக்கு உத்தியோகத்தர்களை நியமனம் செய்ய வேண்டிய தேவை அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.

மேலும், பொதுவான உத்தியோகத்தர் பற்றாக்குறைகளை நிவர்த்திப்பதற்குத் தேவையான நிதி ஒதுக்கீடுகளை மேற்கொள்ள வேண்டுமென்றும், அதற்கு நிறுவன ரீதியான ஒத்துழைப்புக்கள் தேவைப்படுவதாகவும்

இந்த ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது.[138] சேவை வழங்குநர்கள் பேச்சு வழக்கு உள்ளடங்கலாக, உள்;ர் மொழிப்பயன்பாட்டைப் புரிந்துக்கொள்ளக்கூடிய தமிழ் பேசும் உத்தியோகத்தர்களை பணிக்கமர்த்த வேண்டும்.[139] அத்துடன், தொழிநுட்ப அடிப்படையிலான பாலியல் மற்றும் பால்நிலை வன்முறைகளைத் தீர்ப்பதற்கு குறித்தொதுக்கப்பட்ட நிரந்தர பணியாட் பதவிகளும் காணப்படுதல் வேண்டும். உதாரணமாக, மட்டக்களப்பு பொது வைத்தியசாலையின் பால்நிலை அடிப்படையிலான வன்முறைத் தடுப்பு அலகில், நிரந்தர உத்தியோகத்தர்களுக்கான குறைபாடு, குறிப்பாக ஒரு பெண் மருத்துவ உத்தியோகத்தர் மற்றும் இரு பெண் தாதி உத்தியோகத்தர்களுக்கான வெற்றிடங்கள் இருப்பதாக அறிக்கையிடப்பட்டுள்ளது.

மேலும், இந்த மாவட்டங்களில், சேவை வழங்கும் நிறுவனங்களில் பணியாற்றுகின்ற உத்தியோகத்தர்களுக்கு அரசாங்கத்தினால் விசேடமாக வழங்கப்படுகின்ற தொழிநுட்ப அடிப்படையிலான பாலியல் மற்றும் பால்நிலை வன்முறைகள் தொடர்பான பயிற்சிகள் கிடைப்பதில்லை என்றும் அது பொலிஸ் நிலையங்கள் மற்றும் பிரதேச செயலக அலுவலகங்கள் போன்ற நிறுவனங்களின் சேவைகளை வழங்கலுக்கு தடைகளை ஏற்படுத்துவதாகவும் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. அனுராதபுரத்தில், சட்ட உதவி நிலையத்தில் உத்தியோகத்தர்கள் தனிப்பட்ட ரீதியாக பயிற்சிகளை தொடர்ந்து சான்றிதழ்களை பெற்றுக்கொண்டுள்ளனர். ஏனெனில், அரசாங்கம் இத்தகைய பயிற்சிகளை நடாத்துவதில்லை. அவ்வாறே, ரஜரட்ட பிரஜா கேந்திரய, ஹேஸ்டேக் ஜெனரேசன், வேர்ல்ட் விஷன், சேவ் த சில்ட்ரன், செஞ்சிலுவைச் சங்கம், மற்றும் யாழ் சமூகச் செயற்பாட்டு மத்திய நிலையம் போன்ற சிவில் சமூக அமைப்புகள் பயிற்சிகளுக்கு தேவையான வசதிகளை ஏற்பாடு செய்து பயிற்சி இடைவெளிகளை நிவர்த்திக்க முயலுகின்றன. மேலும், 107 மற்றும் 109 போன்ற பொலிஸ் துரித அழைப்பு மையங்களில் பதிலளிக்கும் உத்தியோகத்தர்களுக்கும் அரச நிறுவனங்களால் வசதிப்படுத்தி நடாத்தும் பயிற்சி வாய்ப்புக்களை வழங்கப்படுதல் வேண்டும். இவ்வாறான பயிற்சிகளில் டிஜிட்டல் சாட்சி முகாமைத்துவம், இணைய வழி குற்றப் புலனாய்வு, நிகழ்நிலை துஷ்பிரயோகம், புகைப்படங்கள் அல்லது காணொளிகளை திரிபுபடுத்தல், மற்றும் சேவை வழங்குநர்களுக்காக மன அதிர்ச்சிகளை அறிந்த உளவள ஆலோசனைகள் என்பவற்றை உள்ளடக்குதல் வேண்டும்.[140] மேலும், நீதிமன்ற நடைமுறைகளுக்காக டிஜிட்டல் சான்றுகளை களஞ்சியப்படுத்தலும் பாதுகாத்தலும், பால்நிலை கூருணர்வு, தொழில்நுட்ப அடிப்படையிலான பாலியல் மற்றும் பால்நிலை வன்முறைகள் முதலியவற்றை தீர்ப்பதற்கு தொடர்புடைய சட்டங்களை நடைமுறைப்படுத்தல் போன்ற தலைப்புக்களையும் உள்ளடக்குதல் வேண்டும்.[141] (141) ஆண் மற்றும் பெண் உத்தியோகத்தர்களுக்கு பங்கேற்கக்கூடியவாறான பொலிஸ் பயிற்சிக் கல்லூரிப் பாடத்திட்டங்கள் போன்ற அரசாங்க பயிற்சி நிறுவனங்கள் ஊடாக தொழில்நுட்ப அடிப்படையிலான பாலியல் மற்றும் பால்நிலை வன்முறைகள் சார்ந்த பயிற்சிகளை வழங்குவதற்கு கட்டமைக்கப்பட்ட முறைமையொன்று காணப்படுதல் வேண்டும். இது முக்கியமானது. ஏனெனில், வன்முறையில் பாதிக்கப்பட்டோரும் வன்முறையிலிருந்து தப்பிப் பிழைத்தோரும் ஆரம்பமாக தாம் எதிர்கொள்ளும் முதல் ஆணிடமே இது குறித்து பேசுகின்றனர்.[142]

[138] சேவை வழங்குநர்களுடனான இலக்குக் குழ் கலந்துரையாடல், கிளிநொச்சி;

[139] சேவை வழங்குநர்களுடனான இலக்குக் குழு கலந்துரையாடல், கிளிநொச்சி;

[140] அக்கறைதாரர்களுடனான இலக்குக் குழு கலந்துரையாடல், கிளிநொச்சி;

[141] சமத்துவம் மற்றும் நீதிக்கான நிலையம (CEJ) மற்றும் இக்வாலிட்டி நவ் (Equality Now), ணைந்து வழங்கியஇ ‘Shadow Report to the United Nations Committee on the Elimination of Discrimination Against Women’ இலங்கையின் 9வது காலகட்ட மதிப்பாய்வு (2025)

[142] சமத்துவம் மற்றும் நீதிக்கான நிலையம் (CEJ) , ‘Trapped: A rapid assessment of the prevalence and response to cases of cyber sexual and gender-based violence and gendered online hate speech’ (2023)

**அட்டவணை 5.1:** தொழிநுட்ப அடிப்படையிலான பாலியல் மற்றும் பால்நிலை வன்முறைச் சம்பவங்களில் உதவும் உத்தியோகத்தர்களுக்குத் தேவைப்படும் பயிற்சி



மேலும், பரிந்துரைகளை மையப்படுத்திய முறைமை அல்லது சம்பவ முகாமைத்துவ முறைமை என்பன போதியளவு இல்லை என்றும் குறித்த ஆய்வில் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. சில சேவை வழங்குநர்கள் பாதிக்கப்பட்ட பெண்களது தேவைகளின் அடிப்படையிலேயே தேவையான வழிப்படுத்தல்களை மேற்கொள்வதுடன், இங்கு மையப்படுத்தப்பட்ட வழக்கு முகாமைத்துவ முறைமையொன்று காணப்படுவதில்லை. அதன் விளைவாக, பெண்களுக்கு தமது முறைப்பாட்டினை பல்வேறு சேவை வழங்குநர்களிடம் மீண்டும் மீண்டும் கூற வேண்டியேற்படுவதால் அவர்கள் மீண்டும் மீண்டும் உள ரீதியாகப் பாதிக்கப்படுகின்றனர். இதனால், வெவ்வேறு சேவை வழங்குநர்களுக்கு இடையில் முறையான ஒருங்கிணைப்பு பொறிமுறையொன்று காணப்படுதல் வேண்டும் என்பதுடன், அது வினைத்திறனுடன் பின்தொடரலை சாத்தியமாக்கவும் வேண்டும். மேலும், தொழில்நுட்பம் சார்ந்த பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறைகளினால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கென ஒரு தனியான துரித அழைப்பு சேவை காணப்படுதல் வேண்டும். அப்போது, அவர்களுக்கு சட்ட அமுலாக்கம், சட்ட உதவி, உளவள ஆலோசனை மற்றும் சுகாதார சேவைகளை ஒருங்கிணைக்கக்கூடியதாக இருக்கும்.

சாராம்சமாக, இவ்வாய்வு பின்வரும் பரிந்துரைகளை மேற்கொள்கின்றது:

- தொழில்நுட்ப அடிப்படையிலான பாலியல் மற்றும் பால்நிலை வன்முறைகளை அடையாளபடுத்தும் பொலிஸாரின் எதிர்வினைகளை வலுப்படுத்தல். இதற்கு வன்முறைகளிலிருந்து தப்பிப் பிழைத்தோர் மைய அணுகுமுறைகளை பிரயோகிக்கும் விதத்தில் பயிற்றுவிக்கப்பட்ட பெண் பொலிஸ் உத்தியோகத்தர்கள் மற்றும் டிஜிட்டல் பாதுகாப்பு நிபுணர்களைக் கொண்ட அர்ப்பணிப்புமிக்க, பன்மொழி மற்றும் பால்நிலை கூருணர்வுமிக்க அலகுகளை தாபிப்பதோடு, தனிப்பட்ட உளவள ஆலோசனை மற்றும் உளவியல் உதவிகளுக்கான வசதிகளையும் ஏற்படுத்துதல்.
- விசேட உளவள ஆலோசகர்கள், பயிற்றுவிக்கப்பட்ட வைத்தியர்கள், சமூக உத்தியோகத்தர்கள்/சமூக உதவி உத்தியோகத்தர்கள், மற்றும் பெண் மற்றும் பன்மொழி பேசும் உத்தியோகத்தர்களை சந்தித்து அவர்களிடம் விடயங்களை முன்வைப்பதற்கான வாய்ப்புக்களை உறுதிப்படுத்துவதன் வாயிலாக தொழிநுட்ப அடிப்படையிலான பாலியல் மற்றும் பால்நிலை வன்முறைகளிற்கு எதிர்வினையாற்றும் வைத்தியசாலைகள் மற்றும் சுகாதார மையங்களை வலுப்படுத்தல்.
- தொழில்நுட்ப அடிப்படையிலான பாலியல் மற்றும் பால்நிலை வன்முறைகள் தொடர்புடைய சம்பவங்களைக் கையாளுவதற்காக பயிற்றுவிக்கப்பட்ட சட்டத்தரணிகள், விசேட உளவள ஆலோசகர்கள், சமூக உத்தியோகத்தர்கள், பெண் மற்றும் பன்மொழியறிவுடைய உத்தியோகத்தர்கள் மற்றும் அர்ப்பணிப்புமிக்க அலகுகளில் பணியாற்றும் உத்தியோகத்தர்கள் ஆகியோரின் உதவி மற்றும் ஒத்துழைப்புக்களைப் பெற்றுக்கொள்ள முடியும் என்பதை மாவட்ட மற்றும் பிரதேச செயலக அலுவலகங்கள் உறுதிப்படுத்தல் வேண்டும்.
- தொழில்நுட்ப அடிப்படையிலான பாலியல் மற்றும் பால்நிலை வன்முறைச் சட்டங்கள் தொடர்பாக பயிற்றுவிக்கப்பட்ட சட்டத்தரணிகள், விசேட உளவள ஆலோசகர்கள், சமூக உத்தியோகத்தர்கள், சமுதாய உதவி உத்தியோகத்தர்கள், பெண் உத்தியோகத்தர்கள், மற்றும் தமிழ் பேசும் உத்தியோகத்தர்கள் ஆகியோரின் சேவைகளை இலகுவில் பெற்றுக்கொள்ள முடியும் என்பதை சட்ட உதவி நிலையங்கள் உறுதிப்படுத்த வேண்டும்.
- மீண்டும் மீண்டும் மன அழுத்தத்தை ஏற்படுத்தாத வினைத்திறனான மற்றும் கூருணர்வுமிக்க முறைமையில், வழக்குகள் கையாளப்படுவதனையும் வழிப்படுத்தப்படுவதனையும் உறுதிப்படுத்துவதற்காக அனைத்து நிறுவனங்களுக்கும் அனைவராலும் இலகுவில் அணுகத்தக்கதான பரிந்துரைகளை மையப்படுத்திய ஒரு முறைமையை அல்லது வழக்கு முகாமைத்துவ முறைமையை தாபித்தல் வேண்டும்.

# உசாத்துணைப் பட்டியல்


1. ஐக்கிய நாடுகள் மக்கள் தொகை நிதியம் (UNFPA) மற்றும் ஐக்கிய நாடுகள் பெண்கள் அமைப்பு (UN https://gbvguidelines.org/wp/wp-content/uploads/2019/11/AAA-framework-Nov-2019-WEB.pdf
2. ஐக்கிய நாடுகள் பெண்கள் அமைப்பு (UN Women) Translating Evidence into Action for Victim/Survivor-Centered Governance (OECD Publishing 5 September 2025)
3. சீடோ கமிட்டி Working Group on Gender-Based Violence, CEDAW Committee, Tech-Facilitated Gender-Based Violence Against Women
4. நிகழ்நிலையில் பெண்களைப் பாதுகாப்பதற்கான நிலையம் (Centre for Protecting Women Online);, 'Response to Human Rights Council's Advisory Committee Questionnaire on Technology-Facilitated Gender-Based Violence against Women and Girls' (2025)
5. ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியம் 'Availability, Accessibility, Acceptability and Quality Framework: A Tool to Identify Potential Barriers to Accessing Services in Humanitarian Settings'
6. சமத்துவம் மற்றும் நீதிக்கான நிலையம (CEJ) மற்றும் இக்வாலிட்டி நவ் (Equality Now) இணைந்து வழங்கியஇ 'Shadow Report to the United Nations Committee on the Elimination of Discrimination Against Women', இலங்கையின் 9வது காலகட்ட மதிப்பாய்வு (2025)
7. சமத்துவம் மற்றும் நீதிக்கான நிலையம் (CEJ), 'Trapped: A rapid assessment of the prevalence and response to cases of cyber sexual and gender-based violence and gendered online hate speech' (2023)
8. இலங்கை சட்ட உதவி ஆணைக்குழு, இலங்கை சட்ட உதவி ஆணைக்குழு
9. மகளிர் மற்றும் சிறுவன் அலுவல்கள் அமைச்சு 'Women Development Officers', மே 8 ஆம் திகதி அணுகப்பட்டது..
10. இலங்கை தகவல் தொடர்பாடல் ஒழுங்குபடுத்தல்கள் ஆணைக்குழு, 3 Digital Short Codes for Special Services
11. மகளிர் மற்றும் சிறுவன் அலுவல்கள் மற்றும் சமூக மேம்பாட்டு அமைச்சு, The Multi-Sectoral National Action Plan to Address Sexual and Gender-Based Violence (SGBV) in Sri Lanka – Phase II (2024–2028)




**சமத்துவம் மற்றும் நீதிக்கான நிலையம்**

37/2 எலிபேங்க் வீதி, கொழும்பு 05, இலங்கை

தொ.பே. +94 11 2055404

www.cejsrilanka.org | srilanka.cej@gmail.com

/CEJ.SL

/cej_srilanka

/CEJ_SriLanka

/CEJSriLanka



ISBN 978-624-5847-32-7

9 786245 847327